திராவிடன்

ஆசிரியர் : என்.வி.என்.

சென்று வருகிறேன்!
வென்றுகாட்டுங்கள்!!

**நான் கைதாகும் நாள்—
நாட்டுக்கு ஒரு திருநாள்!**

"என்னைக் கைது செய்தால் யாரும் பதறக் கூடாது - கதறக் கூடாது. வழியும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் காட்சியளிக்க வேண்டும்.

உன் அண்ணனைக் கைது செய்து விட்டார்கள் என்று யாரேனும் ஒருவர் வந்து உங்களிடம் கூறினால், ஆம் தெரியும்; உனக்கும் சேர்த்துத்தான் என் அண்ணனைச் சிறைக்கு அனுப்பி வைத்திருக்கிறேன்; சென்று வருவார்-வென்று காட்டுவேன் என்று கூறுங்கள்!

கைதான செய்தி கேட்டு நீங்கள் கலங்கினால், காங்கிரசார் கேலி செய்வார்கள். எனவே, நான் கைதாகும் நாளை நீங்களெல்லாம் நாட்டுக்கு ஒரு திருவிழாவாக கொண்டாட வேண்டும்"

14—12—63
12 பக்கங்கள்

வார இதழ்

16 காசு.

தலையங்கம்

மாலை 17. 14—12—63 மலர் 20

அண்ணாவைப் பின்தொடர்ந்து...!

[என். வி. என்.]

1938-ம் ஆண்டிலிருந்து இந்தி ஏகாதிபத்தியக் கொடுமையை அறவழியில் நின்று உறுதிப்பாட்டுடன் எதிர்த்துவரும் நமது மதிப்பிற்குரிய அண்ணா அவர்கள் இதுவரை பலமுறை சிறைத் தண்டனைக் கொடுமைக்கு ஆளாகியிருக்கிறார்கள். மீண்டும் இந்தி ஏகாதிபத்திய வெறிக்குத் துணைபோன அடக்குமுறையால் ஆறு திங்கள் சிறைத் தண்டனை பெற்றிருக்கிறார்கள். அன்னைத் தமிழ் மொழியைக் காக்க இந்தச் சிறைத் தண்டனையை அண்ணா அவர்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டிருந்தாலும், இந்தி பேசாத பகுதி மக்கள்—குறிப்பாக தமிழக மக்கள் இந்தி ஆதிக்கத்தின் மூர்க்கத்தனத்தை வன்மையாகக் கண்டித்து வருகிறார்கள் என்று கூறின் மிகையாகாது.

திராவிட முன்னேற்றக்கழகம். ஆளுங்கட்சிக்கு ஏதாவது எதிர்ப்புக் காட்டவேண்டுமென்ற எண்ணத்தால் இந்தி எதிர்ப்பு அறப் போராட்டத்தில் ஈடுபடவில்லையென்பதை அரசியல் விவேகம் படைத்தவர்கள் மனமார உணர்ந்த உண்மையாகும். ஆனால் அதை மதித்து நடக்கும் மனவளம் ஆளவந்தார்களுக்கு இல்லாதது வருந்தத்தக்கதாகும்.

கடந்த 25 ஆண்டுகளாகத் தொடர்ந்து இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துப் பலவித கொடுமைகளுக்கு ஆளாகிவரும் தென்னக மக்களின் நியாயமான கோரிக்கையை—மொழிச் சிக்கலை மனித சுபாவத்துடன், அரசியல் தெளிவுடன் சிந்தித்துப் பார்த்து செயலாற்றுவதற்குப் பதிலாக, தங்களிடம் எதற்கும்—எந்தத் துரோகத்துக்கும் தலையாட்டும் நபர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கிறார்கள் என்ற ஆணவத்தால் மொழி ஏகாதிபத்தியத்தை நிலைபெறச் செய்துவிடலாம் என்று மனப்பால் குடிக்கிறார்கள் இந்திய அரசினர்!

ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் இந்தி ஆதிக்கத்தின் அந்த ஆசாபாசத்தைத் தனது அறப்போர் மூலமாக, இந்தி பேசாத மக்களின் இதயபூர்வமான ஒத்துழைப்பு என்னும் மகத்தான சக்தியின் வாயிலாகத் தகர்த்தெறியப் போவது உறுதி!

எங்கள் அண்ணாவையும் அருமைத் தோழர்களையும் சிறையில் அடைத்து விடுவதினால், கழகத்தின் அறப்போர் தகர்ந்துவிடும், என்று ஆளவந்தார்கள் இன்னும்கூட எண்ணுவார்களானால், அதைவிட அப்பாவித்தனம் வேறு இருக்க முடியாது.

அண்ணா அவர்களுக்கும் கழக முன்னணி வீரர்களுக்கும், தோழர்களுக்கும் அரசாங்கம் விதிக்கும் சிறைத் தண்டனையின் ஒவ்வொரு நாளும், அரசாங்கத்தினர் தங்களது ஆட்சியின் ஆயுட்காலத்தை ஒவ்வொரு நாளாகத் தாங்களே குறைத்துக் கொள்ளுவதாகும்.

அண்ணா அவர்கள் சிறைத் தண்டனை முடிந்து விடுதலை பெறும் வரையில், கழகத்தைக் கட்டிக்காப்பதும், கழகம் வகுத்துள்ள அறப்போர் திட்டத்தை இனிதே நிறைவேற்றித் தருவதும் கழகத்தைச் சார்ந்த ஒவ்வொருவரின் கடமையாகும் என்பதை நாம் கூறத்தேவையில்லை. நமக்குள் மிகமிகச் சிறிய அபிப்பிராய பேதமாயினும் பெரிதுபடுத்தி, கழகத்தைச் சீர்குலைத்துவிடலாம் என்ற ஈனபுத்தியில் எதிரிகள் மூழ்கியுள்ளனர். எனவே கழகத்தின் முக்கிய பொறுப்பிலிருப்பவர்களிலிருந்து கழக உறுப்பினர்கள் ஒவ்வொருவரும், தங்கள் இதயத்தில் அண்ணா அவர்களின் சிறந்த பண்புகள் நிலைபெற்றிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டும் வகையில் தோழமை உணர்வுடன் கட்டுப்பாடாக பணியாற்றுவோம். அதுவே அண்ணா அவர்களுக்கும் அவரது தூய்மையான பொதுவாழ்வுக்கும் காட்டும் மரியாதை—மதிப்பு—பாசமாகும்.

அருமை அண்ணா அவர்களுடன் சிறைசெல்லும் வாய்ப்பினைப் பெற்ற தோழர்கள் டி. எம். பார்த்தசாரதி, டி. கே. பொன்னுவேலு, வெங்கா, கே.பி. சுந்தரம் ஆகியோரையும் மனமாரப் பாராட்டுகிறோம்,

அடுத்தபடியாக அண்ணா அவர்களைத் தொடர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட நமது தலைமை நிலையச் செயலாளரும், 'தென்னகம்' ஆசிரியரும், சட்டமன்ற உறுப்பினரும், அருமைத் தோழருமான **கே. ஏ. மதியழகன் பி.ஏ.** அவர்களுக்கு அரசாங்கம் ஆறு திங்கள் கடுங்காவல் தண்டனை விதித்திருக்கிறது. திராவிடப் பெருங்குடி மக்களின் தன்மான வாழ்வுக்காக திராவிட கழகத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகமாக மலர்ந்துள்ள இன்றுவரை பலமுறை சிறைத்தண்டனையடைந்து தியாக முத்திரை பெற்றவர் அருமை நண்பர் மதியழகன் அவர்கள்.

அவர் இரண்டாவது குழந்தைக்குத் தந்தையாகி இரண்டு திங்கள்தானாகின்றன, எனினும் குடும்பத்தைப்பற்றி இரண்டாவது பட்சமாக எண்ணி அறப்போரில் ஈடுபட்டு கடுந்தண்டனை பெற்று, சிரித்த முகத்துடன் சிறை சென்ற அவரது கடமை உணர்ச்சியை மனமாரப் பாராட்டுகிறோம்.

அதுபோலவே அவருடன் சிறைசென்ற மற்ற நான்கு வீரர்களையும், தோழர். கே. எஸ். இலக்குமணன் அவர்களைத் தலைவராகக் கொண்ட அணியினர் ஆறு திங்கள் கடுந்தண்டனையையேற்றுத் தலைநிமிர்ந்து சிறைக்கோட்டம் சென்ற அவர்களது வீரத்தையும் பாராட்டுகிறோம்.

நமது அண்ணா அவர்களைப் பின்தொடர்ந்து நமக்குக் கழகம் இட்ட கட்டளைப்படி கடமையாற்ற முற்படுவோம்; அரசினர் தங்களது கடுமையான சிறைத் தண்டனைகள் மூலம் நாம் இலட்சியத்தை அசைத்துவிட முடியாது. நமது அண்ணா வகுத்துத்தந்த அறப்போரில் வெற்றி பெறுவோம். உறுதி—உறுதி—உறுதி!

○

வாழ்க கென்யா

கென்யா—எந்த நாளிலும் விடுதலை பெற முடியாது என்று அந்நாட்டு மக்களே சில சமயங்களில் சோர்வு மனப்பான்மை கொண்டிருந்தனர். அதன் காரணமாக, குடியேற்ற நாட்டு ஆதிக்க ஏகாதிபத்தியத்தின் கொடுமை, அடக்குமுறை ஆகியவைகளுக்கு அந்நாட்டு மக்கள் ஆளாகிவந்தனர். அந்நாட்டிலுள்ள விளைச்சல் நிலங்கள் அத்தனையையும் தங்களுக்கே உரிமை ஆக்கிக்கொண்டு நிறவெறியின் காரணமாக மக்களை அடிமைகளாக்கி அவர்களது சமூக, பொருளாதார உரிமைகளையும் பாழ்படுத்தி வந்தனர். சுதந்திர வீரரான கென்யாட்டோ, போன்றவர்கள் பலவித கொடுமைகளுக்கு ஆளாகி தியாகம் பல புரிந்ததன் காரணமாக இன்று கென்யா சுதந்திரம் பெற்று தலைநிமிர்ந்து நின்று, உலகநாடுகளுடன் தனது மறுமலர்ச்சிப் பயணத்தைத் தொடங்குகின்றது. இந்த மகத்தான வரலாற்று நிகழ்ச்சி விடுதலையை விரும்பி வரவேற்கும் ஒவ்வொருவருக்கும் பெருமகிழ்ச்சி அளித்திருக்குமென்பதில் ஐயமில்லை.

கென்யாவின் விடுதலை, எஞ்சியுள்ள குடியேற்ற நாட்டு ஆதிக்க ஏகாதிபத்தியத்திற்கும் குறிப்பாக மனித உரிமைகளைப் பறித்து புதிய ஏகாதிபத்தியங்களை உருவாக்கத் திட்டமிட்டுவரும் தீய சக்திகளுக்கும் சிறந்த படிப்பினையாக அமையப் பெற்றிருக்கிறது.

வாழ்க கென்யா! வெல்க விடுதலை வேட்கை!!

——(0)——

கே. ஏ. மதியழகன் அவர்களுக்கு 6 மாதக் கடுங்காவல்!

——[()]——

2—12—63 அன்று சென்னை மவுண்டுரோடு தபால் அதிகாரி அலுவலகம் முன்பு மறியல் செய்ததற்காக, தி. மு. க. தலைமை நிலையச் செயலாளர் கே. ஏ. மதியழகன் அவர்களுக்கும், அவரது அணியினைச் சார்ந்த தோழர்கள் சி. ஆர். கோலப்பா, க. மோகனசுந்தரம், இரா. நடராசன், வி. பி. இராமன் ஆகியோருக்கும் 6 மாதக் கடுங்காவல் தண்டனை விதித்து 12—12—63 அன்று தலைமை மாகாண மாஜிஸ்திரேட் திரு. பி. எஸ். சோமசுந்தரம் தீர்ப்பளித்தார். தீர்ப்பைக் கேட்க ஏராளமான பொதுமக்களும், வழக்குமன்றத்தில் நாவலர் நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, என். வி. நடராசன், ஏ. கோவிந்தசாமி, சத்தியவாணிமுத்து, காஞ்சி கல்யாணசுந்தரம், நீலநாராயணன், கே. ஏ. கிருஷ்ணசாமி, முல்லை-சத்தி, எஸ். இராகவானந்தம், அறிவுடைநம்பி மற்றும் பலரும் கூடியிருந்தனர்.

ஃ

3—12—63 அன்று சென்னை தொலைபேசி அலுவலகம் முன்பு மறியலில் ஈடுபட்டுக் கைதான தோழர் கே. எஸ். இலக்குமணன் அவர்களுக்கும் அவரது அணியைச் சேர்ந்த தோழர்கள் எம். கே. அண்ணாமலை, எம். கணேசன், பி. என். இராமசாமி, எம். நந்தன் ஆகியோருக்கும் 6 மாதக் கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டது.

ஃ

6—12—63 அன்று நுங்கம்பாக்கம் வருமானவரித் துறை அலுவலகம் முன் மறியலில் ஈடுபட்ட தோழர் செ. மோகனப்பா அவர்களுக்கும் அவரது அணியைச் சேர்ந்த தோழர்கள் து. விநாயகம், மு. செழியன், த. பக்தவத்சலம், தி. நவநீதம் ஆகியோருக்கும் 6-மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது!

இலக்கிய உலகம்

பேராசிரியர்
மா.கி.
தசரதன்
எம்.ஏ.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

சங்க இலக்கியங்கள் என்றழைக்கப்படும் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சேர்ந்து பதினெட்டு நூல்கள் ஆகின்றன. வேறு சில நூல்களை ஒன்ருகத் தொகுத்து அவற்றை ஒன்ருக்கியபோது அந்தத் தொகுதியிலும் பதினெட்டு நூல்கள் இருக்குமாறு செய்தனர். அவற்றையே பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்று சொல்லுகின்ரேம்.

அவை யாவை?

'இதோ இவைதான்' என்று உடனே சுட்டிக்காட்டிச் சொல்லிவிட முடியாது. ஏன்? ஒரு வெண்பா இருக்கிறது அல்லவா? (பதினெண்)கீழ்க்கணக்கு நூல்களைச் சொல்வதற்கு, அதைச் சொல்லலாம் அல்லவா? இதோ அந்த வெண்பா:

நாலடி, நான்மணி, நால்நாற்
பது, ஐந்திணை முப்
பால், கடுகம், கோவை, பழ
மொழி, மாமூலம்,
இன்னிலைசொல் காஞ்சியுடன்
ஏலாதி, என்பனவே
கைந்நிலைய ஆம்கீழ்க்கணக்கு.

இந்த வெண்பாவைக் கொண்டு சொல்லிவிடலாமே என்கிறீர்கள். இதிலேதான் தொல்லை. 'பாட பேதம்' என்று ஒன்று உண்டு. அது எல்லா நூலிலும் நீக்கமற நிறைந்திருக்கிறது. இதுதான் பாட்டின் வடிவம் என்று ஒவ்வொருவரும் ஒவவொரு வகையாகச் சொல்லி, வெவ்வேறு வகையான பொருள்களைச் சொல்வர். இந்தப் பாட்டிலும் அதே போல ஐந்திணை, இன்னிலை முதலான சொற்களில் சிறு சிறு வேறுபாடுகள் சொல்லி பதினெட்டு நூல்கள் இவைதாம் என ஒவ்வொரு சாரரும் ஒவ்வொரு வகையாகச் சொல்வர். எனினும் பொதுவாகப் பெரும்பாலோர் கருத்துப்படி முதலில் பார்ப்போம். பின்னர் கருத்து வேறுபாடுகளைப்பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

1. திணைமொழி ஐம்பது
2. ஐந்திணை ஐம்பது
3. கைந்நிலை
4. ஐந்திணை எழுபது
5. திணைமாலை நூற்றைம்பது
6. கார்நாற்பது
7. களவழி நாற்பது
8. முதுமொழிக்காஞ்சி
9. திரிகடுகம்
10. இன்னுநாற்பது
11. இனியவை நாற்பது
12. நான்மணிக்கடிகை
13. சிறுபஞ்சமூலம்
14. ஏலாதி
15. ஆசாரக் கோவை
16. பழமொழி
17. நாலடியார்
18. திருக்குறள்

ஆம்! ஏறத்தாழ சங்ககாலத்து நூலாக எண்ணப்படும் திருக்குறளும் இந்தத் தொகுதியில்தான் அடங்குகின்றது. நீதிநூல் என்ற வகையில் அப்படி அமைத்தார்கள் போலும்!

திணைமொழி ஐம்பது

ஐந்து திணை(ஒழுக்கம்)களைப் பற்றிக் கூறும் ஐம்பது பாடல்கள் கொண்டது இந்நூல். **கண்ணன் சேந்தனுர்** என்பவர் இதனை இயற்றியவர்.

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய ஐந்து திணைகளைப் பற்றியும் ஒவ்வொன்றுக்கும் பத்து வீதம் ஐம்பது வெண்பாக்கள் கொண்டது இந்நூல். சுவையும், எளிமையும் அமைந்த இந்நூற் பாடல்கள் பல நீதிகளையும் உள்ளடக்கி உள்ளது.

ஐந்திணை ஐம்பது

இதுவும் ஐந்து திணைகளைப் பற்றி—ஒவ்வொரு திணைக்கும் பத்து வெண்பாக்கள் வீதம்—ஐம்பது பாடல்கள் கொண்ட நூலாகும். இதனை இயற்றிய புலவர் பெயர் **மாறன் பொறையனுர்** என்பது.

பண்டைப் பழக்கவழக்கங்களை எடுத்துச்சொல்லும் இந்நூலின் பாக்கள் இனிமை கொண்டு விளங்குகின்றன.

கைந்நிலை

இந்நூலும் ஐந்து திணைகளைப் பற்றிய பாடல்கள் கொண்டதே. ஆனல் ஒரு வேறுபாடு; அறுபது பாடல்கள் கொண்டதாக இந்நூல் இயற்றப்பட்டது என்கின்றனர். இதில் இப்போது கிடைப்பன, முழு உருவில் கிடைப்பன நாற்பத்து மூன்று வெண்பாக்களே.

பாடல்கள் சில கிடைக்காமற் போனது போலவே, இந்நூலின் ஆசிரியர் பெயரும் நமக்குத் தெரியாமலிருக்கிறது. அழகான இயற்கைக் காட்சிகள் பல இந்நூலில் ஓவியம்போல் எடுத்துக்காட்டப் படுகின்றன.

ஐந்திணை எழுபது

ஐந்து திணைகளைப் பற்றிய எழுபது பாடல்கள் கொண்டது இந்நூல் என்று பெயரிலிருந்து நமக்குத் தெரிகின்றது. என்ருலும் இப்போது நமக்குக் கிடைக்கும் பாடல்களோ, அறுபத்தாறு வெண்பாக்கள்தாம்!

இந்நூலைச் செய்த ஆசிரியர் **மூவாதியர்** என்பவர் ஆவர்.

'சான்ருேர் நட்பு, எப்போதும் அழியாது: என்றும் துணையாக இருந்து பல நன்மைகளைத் தரும். 'கற்புள்ள பெண்களுக்குக் கணவனே உயிர், 'முயற்சியே செல்வம்' என்பன போன்ற பல உறுதிமொழிகளை இந்நூல் கூறுகிறது. பண்டைப் பழக்கங்கள் பலவும் இந்நூல் வாயிலாகத் தெரிகின்றன.

திணைமாலை நூற்று ஐம்பது

ஐந்து திணைகளைப் பற்றியும் உள்ள நூற்று ஐம்பது பாடல்கள் கொண்டது இந்நூல். ஆனல் இப்போது கிடைப்பதோ நூற்று

களம் சென்றவன்

—

காதலியின் ɟண்!

அவனே மணம் முடித்த காளை — மணம் முடிந்து ஆறு திங்களே ஆயின!

இதற்கிடையே தாயகத்தின் மானங் காக்கும் போர் துவங்கியது; தென்னகத்தின் தன்னேரிலாத் தலைவர்—தீந்தமிழ்க் காவலர், 'அன்னை மொழிக்கு ஆபத்து; ஆகாத இந்தி நம் மானங் குலைக்க முனைகிறது; அறப்போர்க்களம் காண அணிவகுத்து வாரீர்' என்று அன்பழைப்பு விடுத்தார்.

இதனைக் கேட்ட காளையின் நெஞ்சம் துடித்தது; 'கல்தோன்றி மண் தோன்ருக் காலத்தே முன் தோன்றிய முதுமொழியாம் தமிழ் அழிக்கப்படுவதா? ஆகாது—என்று ஆர்ப்பரித்தான்! அறப்போர்க்களம் சென்ருன்!

அவனை எண்ணி நெஞ்சம் விம்ம, அவன் தன் நேரிழையாள், பண்ணிசைத்துப் பாடுகிருள்—அண்ணு அவர்கள் தீட்டியுள்ள 'காதலியின் பண் நெஞ்சத்திற்கு உவகையூட்டுகிறது.

அவர்தாண்டி, என்றன் மணுளன்!
அன்னை மொழி காக்க அறப்போரில் பங்கேற்ற
அவர்தாண்டி, என்றன் மணுளன்!
"ஆகாத மொழியான இந்தி—நம்மை
ஆட்டிப் படைத்திட எண்ணி,
நாட்டிலே நுழைவது கண்டு
வீட்டையும் நான் மறந்திடுவேன்;
விழியாலே மொழி பேசும் துணையையும் பிரிந்திருப்பேன்;
மரபு அழிந்திடச் சகியேன்" என,
மார் தட்டிக் களம் சென்ற மாவீரன் அவரே!
அவர்தாண்டி, என்றன் மணுளன்!

அண்ணா

"தாலாட்டும் தாய்"!

—0—

இந்தி ஆதிபத்தியத்தை அழித்தொழிக்க வேண்டும் —இன்று இடம்கொடுத்தால் என்றென்றும் தென்னகம் கொத்தடிமையாகும்—கலை அழியும்—கலாச்சாரம் ஒழிக்கப்படும்; இதனைத் தடுத்திட, அறப்போர் அணிவகுத்துச் சிறை சென்றுவிட்டான் காளை!

அவன் பெற்றெடுத்த அன்புச் செல்வத்திற்கு உறக்கம் பிடிக்கவில்லை—உணவும் செல்லவில்லை. தந்தையை எண்ணிக் கலங்கும் 'செல்லமணி'யை, அண்ணா அவர்கள் தாயாகி, தாலாட்டி மகிழ்விக்கிறார்!

அவர் தாலாட்டு, அந்தக் குடும்பத்துக்கு மட்டுமல்ல —தமிழகத்திற்கும், தேம்பிக்கிடக்கும் தென்னகத்திற்கும் உரித்தாகும் :—

கண்ணே! மணியே! தூங்கிடு!
பொன்னே! பொருளே! தூங்கிடு!
பொல்லாங்கான இந்தி விரட்ட—
போருக்குச் சென்றார் உன் அப்பா!
பாருக்கு நல்லவர் உன் அப்பா!
உன்னை எண்ணி உறக்கம் இழப்பார்—
உன்னைப் பிரிந்த உன் அப்பா!
"கண்மணி தூக்கம்தானின்றி,
கலக்கம்கொண்டு உள்ளானே!
உடம்புக்குத் தொல்லை வந்திட்டால்,
உள்ளம் எப்படித் தாங்கிடுவேன்"என,
உருகிக்கிடப்பார் உன் அப்பா—
அதனால், கண்ணே! மணியே! தூங்கப்பா!
கடமைவீரன் மகன் அப்பா, நீ!
கலக்கம் துளியும் கூடாதப்பா!
இந்தி எதிர்த்துச் சிறை சென்ற
என்றன் அரசின் மகனப்பா,
இளவரசும்நீ தானப்பா!

ஐம்பத்து நான்கு வெண்பாக்கள் பல நூல்களில் பாடல்கள் குறைந்துள்ளன; இதிலோ மிகுந்திருக்கின்றன! இதுவும் வேடிக்கை தானே!

கணிமேதாவியார் என்ற புலவர் இதனைப் பாடிய புலவர். இந்நூலின் பாடல்கள் சற்று கடினமான நடையை உடையன. எளிதில் பொருள் தெரியாததோடு, இரண்டு வகையான பொருள்களையும் தருவனவாகும்.

இந்நூலில் உள்ள பாக்களின் வாயிலாக, அன்றைய பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், எண்ணங்கள் ஆகிய பலவற்றை அறிந்துகொள்ளலாம்.

கார் நாற்பது

'கார்' என்பது இந்தக் காலத்துக் 'கார்' அல்ல. இது தமிழ்க் 'கார்'. கார் என்றால் மேகம்; மேகம் உள்ள காலம் என்றெல்லாம் பொருள் உண்டு.

மேகம் உள்ள காலம், முல்லைத் திணைக்கு உரிய காலம் என்று இலக்கணம் சொல்லுகின்றது. அதனை ஒட்டி முல்லைத் திணையைப் பற்றி உள்ள நாற்பது வெண்பாக்கள் கொண்டதாக இந்நூல் இயற்றப்பட்டுள்ளது.

பொருள் (சம்பாதித்து) தேடிக் கொண்டு வரவோ, அல்லது போரில் ஈடுபடுவதற்காகவோ, அல்லது வேறு ஏதேனும் தொழில் பற்றித் தலைவன் (கணவன்) தலைவி (மனைவி)யைப் பிரிந்து செல்வான். செல்லும்முன் இன்ன காலத்தில் வருவேன் என்று சொல்லிவிட்டுச் செல்வான். அந்தக் காலத்தில் இருந்த முறைப்படி மழைக்காலத்தில் வருவேன் என்று இயற்கை நிகழ்ச்சி ஒன்றைக் காட்டிவிட்டுப் போவான். அவ்வாறு செல்லும் தலைவன் வரும் வரை மனத்துன்பத்தைப் பொறுத்துக்கொண்டு வீட்டிலே இருப்பாள் தலைவி. இதற்கு முல்லைத் திணை என்று பெயர். இந்நூல் இந்தப் பொருளைப் பாடுகிறது.

இதனைப் பாடியவர் **மதுரைக் கண்ணங்கூத்தனார்** ஆவர்.

களவழி நாற்பது

'களம்' என்ற இச்சொல் பேச்சு வழக்கிலும் இன்று வழங்கக்கேட்கிறோம். உழவர்கள் கதிர் அடித்த நெல்மணிகளைத் திரட்டும் இடத்திற்கு, களம், களத்து மேடு என்று பெயர்கள் வழங்குவது நமக்குத் தெரியும். இது மட்டும் அல்லாமல் போரிடும் இடமும் 'களம்' என்றே அழைக்கப்படும். 'போர்க்களம்' என்று அதற்குப் பெயர். அப்படிப்பட்ட போர்க்களம் பற்றிய நாற்பது வெண்பாக்கள் கொண்டது இந்த நூல்.

இதனை இயற்றியவர் **பொய்கையார்** என்ற புலவர் ஆவர். இவர் சேரமன்னனான கணைக்கால் இரும்பொறை என்பவனுக்கு உற்ற நண்பர். அவனுக்கும் சோழன் செங்கணான் என்ற மன்னனுக்கும் கழுமலம் என்ற ஊரில் போர் நடந்தது. போரில் சேரன் தோற்றான். அவனைச் சோழன் சிறை செய்து வைத்திருந்தான். தன் நண்பனைச் சிறையிலிருந்து விடுதலை செய்யக் கருதிய புலவர் சோழனின் வெற்றியைப் புகழ்ந்து இந்நூலைப்பாடி; தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டார் என்று சொல்லுகின்றனர்.

யானைகள் போரிடும் காட்சிகளை இந்நூலின் பாடல்கள் பாடுகின்றன. போரின் கொடுமைகளை ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார்.

முதுமொழிக் காஞ்சி

புறப் பொருளில் 'காஞ்சி' என்பது ஒரு திணையின் பெயர். நிலையாமைக் கருத்தைக் கூறும் பகுதியாக இது அமைந்துள்ளது. முதுமொழி என்பது, முதியோர்—சான்றோர் — மொழி என்றும், முதிய மொழி—பழமொழி—என்றும் பொருள்படுகிறது. இந்நூலின் செய்யுள்கள் வெண்செந்துறை என்ற ஒருவகைப் பாடல்களால் ஆகியவை. இரண்டு அடிகள் கொண்ட பாட்டே வெண்செந்துறை. ஒவ்வொரு அடியிலும் நான்கு சீர் இருக்கும். திருக்குறள் ஒன்றே முக்கால் அடி, இது இரண்டு அடிகள் என்று சொன்னால் விளங்கும்; தெரிந்து கொள்ளலாம்.

1. சிறந்த பத்து, 2. அறிவுப் பத்து, 3. பழியாப்பத்து, 4. துவ்வாப்பத்து, 5. அல்ல பத்து, 6. இல்லைப்பத்து, 7. பொய்ப்பத்து, 8. எளியபத்து, 9. நல்கூர்ந்த பத்து, 10. தண்டாப் பத்து என்ற பத்துப் பிரிவுகளையுடையது இந்நூல். ஒவ்வொரு பத்திலும் பத்துப்பாடல்கள் உள்ளன. பல நீதிகளைச் சொல்லுகின்றன.

இதனை இயற்றியவர் **கூடலூர் கிழார்** என்ற புலவர்

திரிகடுகம்

சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய இவை மூன்றும் நாட்டு மருத்துவர்க்கு இன்றியமையாதன, இவற்றைக்கொண்டு பல நோய்களைப் போக்க முயலுகின்றனர்; வெற்றியும் பெறுகின்றனர். இம்மூன்றும் சேர்ந்த மருந்து 'திரிகடுகம்' என்று அழைக்கப்படுகிறது. அதேபோல், இந்நூலில் உள்ள பாக்களும் மூன்று மூன்று அறங்களைக் கொண்டவையாக இருத்தலின் இந்நூலுக்கும் 'திரிகடுகம்' என்பது பெயர் ஆயிற்று.

மொத்தம் நூறு வெண்பாக்கள் கொண்டது இந்நூல். அவை எளிதில் பொருள் விளங்கும் எளியபாடல்களாகும். இதனை இயற்றிய புலவர் **நல்லாதனார்** ஆவர்.

பல நல்ல அறிவுரைகள் இந்நூலில் காணப்படுகின்றன. வாழ்க்கையை இப்படி அமைத்துக் கொள்ளவேண்டும் என்று அந்த அறிவுரைகள் எடுத்துக்காட்டுகின்றன.

இன்னா நாற்பது

இனியது என்பது எதிர்ச்சொல் இன்னாது என்பது அதாவது 'துன்பம்' என்ற பொருள். இன்னாது என்பதில் உள்ள இறுதி மறைந்து 'இன்னா' என்பது சொல்லின் உருவமாக விளங்குகின்றது. வாழ்க்கையில் துன்பம் தருபவை இவை இவை என்று எடுத்துச் சொல்லும் நாற்பது வெண்பாக்கள் கொண்டது இந்த நூல்.

இதனை இயற்றியவர் **கபிலர்** என்று காணப்படுகிறது. இவர் சங்ககாலத்துக் கபிலராக இருக்க முடியாது என்று சொல்லலாம். பின்னால் இருந்த வேறு ஒரு புலவர்க்கும் கபிலர் என்ற பெயர் இருந்திருக்கலாம். இப்படி ஔவையார் என்ற பெயரில் புலவர்கள் இருந்ததை நாம் அறிவோம்.

இந்த நூலில் 'குடிகளைக் காக்காத வேந்தன் நாட்டில் வாழ்வது துன்பம்', 'கொடுங்கோல் செலுத்தும், கொலை செய்யும் மன்னனின் கீழ் வாழ்தல் இன்னாது', 'நீதி (முறை)யில்லாமல் ஆளும் அரசு துன்பம்' என்பன போன்ற பல பகுதிகள் நல்லாட்சி வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றன.

இனியவை நாற்பது

இன்னது இன்னது கெட்டது என்று சொன்னால் மட்டும் போதுமா? இவை இவை நல்லவை என்று சொல்ல வேண்டாமா? ஆமாம்! அதைச் சொல்வதுதான் இந்த நூல்; நாற்பது வெண்பாக்கள் கொண்டது; மதுரைத் தமிழாசிரியர் மகனார் **பூதஞ்சேந்தனார்** என்ற புலவர் இந்நூலைப் பாடியவர்,

நல்ல கருத்துக்கள் அமைந்த பாடல்கள் இந்நூலில் உள்ளவை. பண்டைக்கால வாழ்வியல் முறையை எடுத்துக்காட்ட வல்லது இந்நூல்.

நான்மணிக்கடிகை

நான்கு மணிகள் பதித்த ஒரு வகை அணியின் பெயர், இந்த நூலுக்கு அமைந்திருக்கிறது. ஏன் எனில் இதிலே வரும் பாடல்களின் ஒவ்வொன்றிலும் நான்கு நீதிகளைக் கூறுகின்றன. ஆகையால் ஒவ்வொரு பாடலும் ஒரு அணி என்று கொள்ளலாம்.

இதனை இயற்றியவர் **விளம்பி நாகனார்** என்பவர் ஆவர். இந்த நூலின் பாடல்கள் எளிமையும் இனிமையும் பொருள் தெளிவும் கொண்டவையாகும். தனி மனிதனின் நல்வாழ்வுக்கான வழி

(8-ம் பக்கம் பார்க்க)

4-ம் பக்கத் தொடர்ச்சி

வகைகளைக் கூறுவது போலவே அரசியல் முறைகளைப் பற்றிய தேர்ந்த உண்மைகளையும் இந்நூல் கூறுகிறது. 'இந்த மன்னன் நல்லவன் என்று சொல்வதே, ஒரு நாட்டுக்கு உயர்வு', குடி மக்கள் கலங்கினல் மன்னனும் கலங்கி அழிவான்' முதலிய இதில் காணப்படும் அரசியல் உண்மைகளாகும். திருவள்ளுவரின் கருத்துக்கள் சிலவற்றையும் இவர் எடுத்து விளக்கியுள்ளார். மொத்தம் நூற்று ஆறு வெண்பாக்கள் உள்ளன.

சிறுபஞ்சமூலம்

இதுவும் நாட்டு மருத்துவர்களின் நம்பிக்கைக்கு உரிய ஒரு பொருளே. கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி நெருஞ்சி ஆகிய இவற்றின் வேர்களைக் கொண்டு செய்யும் மருந்து பல நோய்களைப் போக்கவல்லது என்பர். அதேபோல இந்த நூலில் உள்ள பாடல்களிலும் ஐந்துஐந்து பொருள்கள் கூறப்படுகின்றன. ஆகையால் இதற்கும் சிறுபஞ்ச (ஐந்து)மூலம் என்று பெயர் அமைந்திருக்கிறது. இந்நூலில் தொண்ணூற்று ஏழு பாடல்கள் உள்ளன. இதனை இயற்றியவர் **மாக்காயனர் மாணுக்கன் காரியாசான்** என்பவர்.

ஏலாதி

'ஏலாதி' என்பதும் நாட்டு மருந்துகளில் ஒன்றின் பெயராகும். ஏலம், இலவங்கம், சிறு நாவல் பூ, மிளகு, சுக்கு, திப்பிலி இவை ஆறும் கலந்து செய்யப்படும் மருந்து நோய் நீக்கி நலம் செய்தல்போல், இந்நூலின் பாக்களும் மனத்தின் நோய்களை குற்றங்களை நீக்கப் பயன்படுகின்றமையின் ஏலாதி என்பதையே பெயராக இருக்கிறது. அந்த மருந்திலே ஆறு பொருள்கள் இருத்தலைப் போலவே இந்த நூலிலேயும், ஒவ்வொரு பாட்டிலும் ஆறு ஆறு உண்மைகள் உரைக்கப்படுகின்றன. இதில் எண்பத்து இரண்டு வெண்பாக்கள் உள்ளன.

இதனை இயற்றியவர் **கணிமேதாவியார்** ஆவர்.

வாழ்வுக்கான சிறந்த நீதிகளையும், பல திருக்குறள் உண்மைகளையும் இது கொண்டுள்ளது. படிப்பதற்கும் பொருள் விளங்கிக் கொள்வதற்கும் கொஞ்சமானது இது.

ஆசாரக்கோவை

ஆசாரம் என்பது 'வழி'—பின் பற்றக் கூடிய வழி—வாழும் வழி என்றெல்லாம் பொருள்படுகிறது. அத்தகைய வழிகளைத் தொகுத்து விளக்குவது— கோவைப்படுத்திச் சொல்வது இந்த நூல். மொத்தம் நூறு பாடல்கள் இதிலே உள்ளன. இதனை இயற்றியவர் **பெருவாயின் முள்ளியர்** ஆவர்.

இந்நூல் ஏறத்தாழ சுகாதார நூல் என்று சொல்லலாம். அகம்-மனம்—தூய்மையாக இருப்பது முக்கியம்தான். அதைப் பலர் வலியுறுத்துகின்றனர். இந்நூல் ஆசிரியரும் வலியுறுத்துகின்ருர். அதோடு புறத்தூய்மை—உடல், வீடு, தெரு, ஊர், தகரம், நாடு— இவற்றையும் தூய்மையாக வைத்துக்கொள்ளல் வேண்டும். இதனைத்தான் இந்நூல் மிகுதியாகச் சொல்கிறது. இப்படிப்பட்ட நூல்கள் இன்றியமையாதன அல்லவா?

அன்பழகன் கைதானர்

——(0)——

இந்தி எதிர்ப்பு அறப்போரின் இரண்டாம் கட்டமான மறியல் போரில் இறுதி நாளான 13—12—63 அன்று சென்னை தென்னக இரயில்வே அலுவலகம் முன் மறியல் செய்ததற்காகப் பேராசிரியர் க. அன்பழகன் எம். ஏ., எம்.எல்.சி. அவர்களும் அவரது குழுவினைச் சேர்ந்த தோழர்கள் வ. மணிவண்ணன், ஆர். நாகராசன், இரா. இராமானுசம், ஆர். தங்கராசு ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பழமொழி

இந்த நூலில் நானூறு வெண்பாக்கள் உள்ளன. பாட்டின் முதல் பகுதியில் நீதி ஒன்றினைச் சொல்லி, அதனை விளக்கும் பழமொழி ஒன்றை இறுதியிலே கொண்டு முடியும் பாடல்கள் இந்நூலில் இருப்பவை. இதற்கு 'பழமொழி நானூறு' என்ற இன்னெரு பெயரும் உண்டு.

இதனை இயற்றியவர் பெயர் **முன்றுறையர்** என்பது ஆகும்.

இந்நூலில் பல புராணக் கதைகளும், தமிழ் இலக்கியத்தில் காணப்படும் கதைக் குறிப்புக்களும் இருக்கின்றன. பழமொழி என்ற பெயரே இந்நூலில் ஏராளமான பழமொழிகள் எழுத்தாளப்பட்டிருத்தலை விளக்கும். பல பழமொழிகளுக்கு இப்போது நமக்குப் பொருள் புலனுகவில்லை எனினும் சுவையான பல செய்திகளை இந்நூல் வாயிலாக அறிகின்ருேம்.

நாலடியார்

நானூறு வெண்பாக்கள் கொண்டது இந்நூல். ஆகவே 'நாலடி நானூறு' என்ற இன்னெரு பெயரும் இதற்கு வழங்குகின்றது.

இதனை இயற்றியவர் ஒருவர் இருவர் அல்லர். பல புலவர்கள் சேர்ந்த பாடல்கள் இவை. ஒரு காலத்தில் வடநாட்டில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது என்றும், அதனுல் அப்போது பாண்டி நாட்டில் வந்து தங்கி இருந்த எண்ணுயிரம் சமண முனிவர்கள், மீண்டும் தங்கள் நாடு வளமான போது திரும்பிப்போக முயன்றதாகவும், அதற்கு ஒப்பாத பாண்டிய மன்னன் அவர்களைத் தடுக்கவே, அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாட்டு எழுதித் தாங்கள் தங்கள் இருக்கையின் கீழே விட்டு இரவோடு இரவாகச் சென்று விட்டனர் என்றும், விடிந்த பின் பாடல்களைக் கண்ட மன்னன் அவற்றையெல்லாம் வைகை யாற்றிலே வீசிவிடுமாறு சொன்னுன் என்றும், அவ்வாறு வீசப்பட்ட பாடல்களில் இந்த நானூறு பாக்கள் தேறின என்றும் ஒரு கதை வழங்குகின்றது. இது கட்டுக்கதை என்பதிலே ஐயமில்லை. ஆனுல் இந்தப் பாடல்களின் பெருமையை இக்கதை விளக்க முயலுகின்றது.

இவற்றைத் தொகுத்து ஒரு நூல் ஆகச் செய்தவர் **பதுமனர்** என்று அறிகிரேம்.

'ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி' என்ற பழமொழியும் 'பழகு தமிழ்ச்சொல் அருமை நாலிரண்டில்' என்ற தொடரிலும் நாலடியாரின் பெருமை சொல்லப்படுகிறது.

திருக்குறள் போலவே அறம் பொருள், இன்பம் என்ற மூன்று பிரிவுகளையுடையது இந்நூல்.

ஏறக்குறைய திருக்குறள் கருத்துக்களையே இது வலியுறுத்துகிறது.

திருக்குறள்

காலத்தால் இந்நூல் சங்க இலக்கியங்களோடு சேர்த்து எண்ணப்படவேண்டியது என்ருலும் எப்படியோ இந்தத் தொகுப்பில் அடங்குகின்றது.

குறள் வெண்பாக்களால் ஆனது இந்நூல். உள்ளே சொல்லப்பட்டுள்ள பொருள்களின் சிறப்பு நோக்கித் திரு என்ற அடை சேர்ந்துள்ளது. அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பிரிவுகளில் மொத்தம் 1330 பாக்களைக் கொண்டது இது.

இதனை இயற்றியவர் **திருவள்ளுவர்**. இந்நூலின் பெருமை சொல்லித் தெரியவேண்டியது இல்லை.

'தமிழர்க்கு இதுவே வழிகாட்டி' என்று சொன்னுல் அதிலே எல்லாம் அடங்கிவிடுகிறது அல்லவா?

மகிழ்ச்சிக்குரிய செய்தி!

மதுரபவனம்

காய்கறி சிற்றுண்டி உணவுவிடுதி
(புதுச்சத்திரம்)

196, பாண்டி ரோடு, விழுப்புரம்
துவக்கவிழா நன்னுள்!

14-12-63 சனி காலை 5 மணிக்கு நடைபெறுகிறது.

என்ற மகிழ்க்சிகரமான செய்தியை பொதுமக்களுக்கும். அன்பர்ளுக்கும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. ஆகவே பொதுமக்களும், அன்பர்களும் இந்த நல் விழாவில் கலந்துகொண்டு வாழ்த்துதல் கூறவேண்டுமாய் பெரிதும் விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கம்.
உரிமையாளர்: மதுரபவனம்

என்னுடைய தொண்டு சாமான்யமானதாக இருப்பினும் இந்தியைத் திணிப்பவர்களின்.. நெஞ்சம் சுடும்—

நேர்மைக்கு வழி ஏற்படும்!

1957-ல் நிறைவேற்றப்பட்ட தேசிய அவமதிப்புச் சட்டம் 5-வது பிரிவுடன் இணைத்து இந்தியன் பினல்கோட் 120-பி பிரிவின்படி, குற்றம் சாட்டப்பட்டுத் தங்கள் முன் நிறுத்தப்பட்டிருக்கும் நாங்கள் குற்றவாளிகளல்ல. என்று தெரிவிப்பதைத் தொடர்ந்து 'நிலைமையை விளக்க இந்த அறிக்கையைத் தங்கள் மேலான பார்வைக்குக் கொண்டு வருகிறோம்.

நானும் தி. மு, கழகத் தோழர்கள் பலரும், இந்திய அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவைக் கொளுத்தத் திட்டமிட்டோம் என்பதை எடுத்துக்காட்ட பலர் சாட்சியம அளித்தனர். அதனை வலியுறுத்தும் நோக்குடன் எங்களுடைய பேச்சுக்களிலிருந்து சிற்சில பகுதகள், மேற்கோள்களாக எடுத்துக்காட்டப்பட்டன.

இந்திய அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவைக் கொளுத்துவது நாங்கள் மேற்கொண்ட செயல் என்பதை, மாநாடுகளிலும், குழுக் கூட்டங்களிலும், பொதுக் கூட்டங்களிலும் அறிவித்திருக்கிறோம் என்பது, நடைபெற்ற செயல். அதுகுறித்துச் சான்றளித்தவர்களின் வார்த்தைகளை நாங்கள் மறுக்கவில்லை.

எங்களுடைய முறையீடு, நடைபெற்றவைகளை இல்லை என்று மறுக்கும் முறையில் அமைவது அல்ல; ஆனால் பிரச்சினை முழுவதையும் விளக்குவதாகவே இருக்கிறது.

அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவைக் கொளுத்துவது என்று நாங்கள் செயல்பட முடிவெடுத்தக் காரியத்தைப்பற்றி எழக்கூடிய கெட்ட வாடையில் பெருமளவு, குற்றப் பத்திரிகையின் தன்மையின் மூலமாகவே நீக்கப்பட்டிருப்பது கண்டு நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.

1965-ம் ஆண்டிலிருந்து இந்திய ஆட்சிமொழியாக இந்தி புகுத்தப்படுவதற்கு எதிர்ப்பு காட்டுவது என்ற, திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கையை ஒட்டி, நாங்கள் மேற்கொள்ளத் திட்டமிட்ட நடவடிக்கைகள் இருந்தன. என்று குற்றப் பத்திரிகை எடுத்துக் காட்டுகிறது. மேலும், மற்றோரிடத்தில் அரசியல் சட்ட 17-வது பிரிவைக் கொளுத்துவது என்பதன் தன்மையை விளக்குவதற்காக, 'எதிர்ப்பு காட்டும் முறையில்' இது அமைந்திருப்பதாக, குற்றப் பத்திரிகை தெரிவித்திருக்கிறது.

1965-லிருந்து இந்தி ஆட்சி மொழி ஆக்கப்படுவதை எதிர்ப்பது என்பது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை என்பதை நாங்கள் மறக்கவில்லை; அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவைக் கொளுத்துவது என்பதும் எங்கள் கட்சியின் அறப்போர் திட்டத்திலே ஒரு பகுதி என்பதை ஒப்புக்கொள்ளவும் நாங்கள் தயங்கவில்லை.

நீதி நிலைக்க வேண்டும் என்பதிலும், நேர்மை அரசோச்ச வேண்டும் என்பதிலும் பற்றுக் கொண்ட எவரும், அநீதிக்கு வழிவகுக்கும் எந்தத் திட்டமானாலும், சட்டமானாலும், அதனை மனச்சாட்சியின்படி எதிர்த்து நிற்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பது எங்கள் கருத்தாகும்.

இந்தி ஆட்சிமொழி ஆக்கப்படுவது, பல பெரியவர்கள் தெரிவித்திருப்பது போல, அநீதியானது, இந்தி பேசாத மக்கள் வாழும் பகுதியை அவமதிப்புக்கு உள்ளாக்குவது, அதிலும் ஈராயிரம் ஆண்டுகளாக ஒரு உயர்தனிச் செம்மொழிக்கு உரியவர்கள் வாழும் தமிழ்நாட்டுக்குப் பெரிய அவமதிப்பு, என்று நாங்கள் மனதார நம்புகிறோம்.

மொழிகளிலே எம்மொழி மற்ற எந்த மொழியைவிடச் சிறப்புடையது என்று ஒப்பிட்டு உண்மை உணருவதும் ஒருபுறம் இருக்க ஒருபகுதி மக்களுக்கு மட்டுமே தாய்மொழியாக உள்ள ஒரு மொழியை, இந்தியாவின் எல்லாப் பகுதி மக்களுக்கும் சேர்த்து, ஒரே ஆட்சிமொழியாக ஆக்கிவிடுவது, கொடுங்கோன்மை என்றும், அதன் விளைவாக, இந்தியாவின் ஒரு பகுதிக்கு நிரந்தரமான சலுகையும் உயர்வும் ஏற்பட்டு, மற்றப் பகுதிகள் இருட்டறையில் தள்ளப்பட்டுப் போய்விடும் என்றும், முழு வளர்ச்சி பெறுததும், மற்ற தேசிய மொழிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தனிச் சலுகை பெறுவதற்கு எந்தவிதத் தகுதியும் பெற்றிராததுமாகிய, இந்தியை ஆட்சிமொழி ஆக்குவது, தமிழகத்தின் தொன்மை வாய்ந்த மொழி, பண்பாடு ஆகியவற்றைப் பாழ்படுத்திவிடும் என்றும், நாங்கள் திடமாக எண்ணுகிறோம்; சான்றோர் பலரும் இதனைத்தான் இந்திமொழி ஏகாதிபத்தியம் என்று இடித்துரைத்துள்ளனர்.

நீதிமன்றத்தில் அண்ணா வாக்குமூலம்!

மொழி வல்லுனர்கள், சட்ட நுணுக்கம் கற்ற விற்பன்னர்கள், புகழ்மிக்க ஆட்சிமன்ற உறுப்பினர்கள், கற்றறிவாளர்களாக உள்ள அரசியல் தலைவர்கள், அறவழி அரசு நடத்தும் பேரறிவாளர்கள், நிர்வாகத் துறையில் நிரம்பப் பயிற்சி பெற்றவர்கள், எனும் இத்தகு திறத்தினரெல்லாம், ஆளுங்கட்சி, மொழி விஷயமாக மேற்கொள்ளும் அநீதியான போக்கைக் கைவிட்டுவிட வேண்டும் என்று, அறிவுறுத்திப் பார்த்தார்கள். பல மாநாடுகளிலும், ஆய்வாளர் அரங்குகளிலும், இந்தியை ஒரே ஆட்சிமொழியாக ஆக்குவது என்பது நினைத்துப் பார்க்கவே முடியாத கேடு என்பதையும், நடைமுறைக்கு ஒத்து வராது என்பதையும், அதன் விளைவாக இந்தி பேசாத மக்கள் வாழும் பகுதிகளில், இந்தத் தலைமுறைக்கும் எதிர்காலத் தலைமுறைகளுக்கும், அளவிட முடியாத கொடூரமான கேடு ஏற்படும் என்பதனையும், எடுத்துக்காட்டின.

இத்தகைய முறையீடுகள் யாவற்றுக்கும், ஆட்சியினர் கேளாக்காதினராயினர். வாதங்களை துச்சம் என்று ஒதுக்கித் தள்ளிவிட்டனர். ஆளும் கட்சியைச் சார்ந்த பேச்சு வல்லுனர்களான சில பாராளுமன்ற உறுப்பினர்களின் கனிவுரைகூட கேட்பாரற்றதாகி விட்டது. மற்றவர் கருத்தறிந்து மதிப்பு அளிப்பது, பரிவு காட்டுவது, சிறுபான்மையோர் உரிமைகளுக்கு மதிப்பளிப்பது என்ற தன்மைகள் மக்களாட்சி முறை வெற்றி நடைபோடவும், அறநெறி நிற்கவும் தேவைப்படும் பண்புகளாகும்—ஆளுங்கட்சியின் முரட்டுப் பிடிவாதம், இந்தப் 'பண்புகளை அவர்கள் மதிக்கவில்லை, மேற்கொள்ள விரும்பவில்லை என்பதை மெய்ப்பிக்கிறது. அறநெறி அரசு நடாத்தும் பெருநிலைக்கு உரியோர் மேற்கொள்ள வேண்டிய பண்புடன், இந்திய முதலமைச்சர் பண்டித நேரு அவர்கள், பாராளுமன்றத்தில் பல முறையும், சீனப் பகைவர்கள் நுழைந்தகாலையும், கொடுத்த வாக்குறுதியும், பலனற்றுப் போய்விட்டதுடன்—எவரிடமிருந்து அந்த ஏற்றமிகு வாக்குறுதி பிறந்ததோ அவராலேயே கைவிடப்பட்ட கொடுமையும் நேரிட்டுவிட்டது. அவருடைய வாக்குறுதிதான், கருமேகத்துக்கிடையே காணப்படும் மின்னொளிபோல் இருந்து வந்தது; நாளாகவாக, மின்னொளி மறைந்து போய்விட்டது, கருமேகங்கள் மேலும் மிரட்டும் நிலை ஏற்பட்டுவிட்டிருக்கிறது. கொடுத்த வாக்குறுதியை மீறக்கூடிய விதத்திலும் இந்தி பேசாத மக்கள் மீது அவர்களது உரிமை, உள்ளுணர்வு, சிந்தனை ஆகியவற்றைப் பாழாக்கக்கூடிய முறையிலும் இந்தியைத் திணிக்கும் பயங்கர முயற்சி வெடித்து வெளிக் கிளம்பும் சூழ்நிலையில் உள்ளது.

வேறு பலர் போலவே, திராவிட முன்னேற்றக் கழகம் இந்தி எதிர்ப்புக்காகத் தன் குரல் எழுப்பிப் பார்த்தது; ஆளவந்தார்களின் உள்ளத்திலிருந்து, நீதி வெற்றிப் புன்னகை பூண்டு உலா கிளம்பும் என்று ஆவலாகக் காத்துக் கிடந்தது. ஆனால் ஆளவந்தார்களின் பிடிவாதப் போக்குக் காரணமாக, அந்த நம்பிக்கை யாவும் நொறுங்கிப் போய்விட்டன.

சட்டத்தின் பிடியில் எங்களை ஒப்படைக்கு முன்பு, அருள் கூர்ந்து; தாங்கள், எமது செயலுக்குப் பின்னணியாக அமைந்துள்ள "சூழ்நிலை" முழுவதையும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டுமென பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம், ஏனெனில், சட்டம் ஆட்சி செய்ய வேண்டும் என்ற மரபைக் காத்திட வேண்டிய கடமையுடன் கூட, நீதி வழங்கப்பட வேண்டும் என்ற கடமையும் மேற்கொள்ள வழக்கு மன்றத் தலைவருக்குத் திறமையும் கடமையும் உண்டு என்று நாங்கள் நம்புகிறோம். நீதி வழங்கப்பட வேண்டுமானால், அடிப்படைக் காரணங்களையும் சூழ்நிலையையும் ஆய்ந்தறிய வேண்டுவது இன்றியமையாததாகும்.

மக்களாட்சி முறையில், ஆளவந்தார்கள் புகுத்தும் அநீதியான திட்டங்களை, பிறப்புணர்ச்சியுடன் கண்டறிந்து, உள்ள உரத்துடன் எதிர்த்து ஆற்றல் பெற்ற எதிர்ப்புச் சக்தி இல்லாது போய்விடுமானால், மக்களாட்சி முறை கேலிக்கூத்தாகி, இறுதியில் கொடுங்கோன்மையினும் கேடு கெட்டதாகப் போகும்.

பாராளுமன்ற முறைகள் யாவும், கையாண்டுப் பார்த்துப் பலனளிக்காது போகுமானால், தனிப்பட்டவர்களோ, குழுவினரோ, ஆளுங்கட்சியினுடைய கோபத்தால் கிளம்பக்கூடிய கொடுமைகளையும் தாங்கிக் கொண்டு, மக்கள் எழுச்சி பெறத்தக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு, அநீதியை—மனச்சாட்சியைத் துணைகொண்டு எதிர்த்து நிற்பதன் மூலம்; எண்ணிக்கை பலம் எனும் வாதத்தையே வாளாக்கிக்கொண்டு மக்களை வதைக்கும் ஆட்சிப் போக்கைத் தடுத்து நிறுத்த முடியும்; அத்தகைய எழுச்சி மிக்கவர்கள் முன் வரவேண்டும்.

இந்தத் தூயநோக்குடனேயே, திராவிட முன்னேற்றக் கழகம் இந்தி எதிர்ப்பு அறப்போர் துவக்கத் திட்டமிட்டது—தக்க காரணம் இருப்பதனால்தான், அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவைக் கொளுத்துவதை, அறப்போரில் ஒரு பகுதியாக்கிக்கொண்டது.

புகழொளி வீச வாழ்ந்து மறைந்த, நாட்டுப்பற்றுமிக்க பேரறிவாளர்கள் டாக்டர் பி. சி. ராய், டாக்டர் சுப்பராயன் போன்றோரும், இன்று நம்முடன் இருந்து புகழொளியுடன் வாழ்ந்துவரும், பெரியார், ஆச்சாரியார், சி. பி. இராமசாமி ஐயர்—ஜெனரல் கரியப்பா—வி. பி. மேனன், சர். சி. வி. இராமன், சுனித்குமார் சட்டர்ஜி போன்ற பெரியோர்களும், எடுத்துக்காட்டும் வாதங்களுக்குத் தக்க, திருப்தி தரும், பதில் அளிக்க இயலாத நிலையில், இந்தியை ஆட்சிமொழியாக்கும் ஆபத்தளிக்கும் திட்டத்திற்குக் கர்த்தாக்களாக உள்ளவர்கள், மறுக்கமுடியாத வாதமென்ற முறையிலும், எவருடைய வாயையும் அடைத்துவிடத்தக்கது என்ற எண்ணத்திலும், இந்த 17-வது பிரிவைத்தான் எடுத்துக்காட்டி, எக்காளமிடுகிறார்கள். அது தவறு என்பதைச் சுட்டிக்காட்டவும், அது பொருத்தமான வாதமும் அல்ல, பொருள் உள்ள பதிலும் ஆகாது என்ற உண்மையை ஆளவந்தார்களுக்கு உணர்த்தவுமே, பகிரங்கமாக, 17-வது பிரிவை தீயிடுவது என்ற திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இந்திய அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவிற்கு எதிராகக் கண்டனக் கனல் வீசிக்கொண்டிருக்கிறது என்பதை ஆளவந்தார்கள் உணரவேண்டும் என்ற நோக்கத்துடனேயே, அது திட்டமாக்கப்பட்டது. குற்றப் பத்திரிகை சுட்டிக்காட்டுகிறபடி, எதிர்ப்புக்கான அறிகுறியே, 17-வது பிரிவைக் கொளுத்தும் செயல்.

நான் இதனைத் தங்கள் மேலான கவனத்துக்குக் கொண்டு வருவதற்கான காரணம் எங்களை, சட்டத்தை உடைப்பதைத் தமது தொழிலாக, பழக்கமாக, தங்கள் சொந்த இலாபத்திற்காக மேற்கொள்பவர்களுடன், எங்களையும் ஒன்றாக்கிவிடக்கூடாது என்பதற்காகத்தான். நான், சட்டப்படி சமுதாயம் ஒழுக வேண்டும் என்பதில் நிரம்ப நம்பிக்கையும், அக்கறையும் கொண்டவன். ஏனெனில், மக்களுக்குள் ஒரு சீரான, முறையான தொடர்பும் அமைப்பும் நிலைத்து வளர சட்டம் பயன்படுகிறது. சட்டத்தின் மேன்மைமிக்க குணம் சமுதாய ஒழுங்கைப் பாதுகாத்துத் தருவது; ஆனால் அதுபோலவே, சட்டமும், அறநெறியினாலே ஆக்கப்பட்டும், ஊட்டம் பெற்றும் இருக்கவேண்டும்.

எத்தனையோ சட்டங்கள் உள்ளன—சட்டங்களை மீறுவது என்பதிலேயும் எத்தனையோ வகைகள் உள்ளன. ஏதாகிலும் ஒரு சட்டத்தை நான் மீறுவதன் மூலம், பொதுமக்களுடைய உயிருக்கோ உடைமைக்கோ, உரிமைக்கோ, வாழ்வுக்கோ அமைதிக்கோ ஒழுக்கத்துக்கோ, அழிவோ சிதைவோ, கேடோ, குலைவோ, அதிர்ச்சியோ தளர்ச்சியோ, ஏற்படுமானால், நான் சட்டத்தை மீறுவதற்கு வெட்கப்படுவேன், வேதனைப்படுவேன். ஆனால், சட்டத்துக்கு உட்பட்டதோ அல்லவோ, நான் ஒரு தூய நோக்கத்துக்காக ஒரு செயலில் ஈடுபடுவதன் மூலம் மக்கள் தொண்டு எனும் மாண்புமிகு பணிபுரிய இயலும் என்று நான் மனதார நம்பி, செயலில் ஈடுபடும்போது, குற்றவாளி அல்ல என்று கூறிக்கொள்ள உரிமை பெறுகிறேன்.

தகுதி மிக்கவரே இந்நாட்களில் சட்டங்கள் வேக வேகமாகவும், விதவிதமாகவும் நிரம்ப இயற்றப்பட்ட வண்ணம் இருக்கின்றன. இந்த வேகத்தைக் காப்பவர்கள் எதிர்க்கட்சிகளை வேட்டையாடி ஒழித்துக்கட்டவே சட்டத்தைக் கருவியாக ஆளுங்கட்சி பயன்படுத்தி வருகிறது என்று கருதுகின்றனர்.

மக்களாட்சி முறை மழலைப் பருவத்திலிருக்கும் காலம் வரையிலாகிலும், எண்ணிக்கை பலம் என்பது தவிர வேறு எந்தத் தகுதியும் பெறாத முறையில் சட்டங்கள் ஆக்கப்பட்டு வெளி வருகிறபோது, அவை அப்பழுக்கற்றவை புனிதமானவை என்று மட்டும் கொள்ளாமல், அத்தகைய சட்டங்கள், நீதியையும், மக்களுக்கு உள்ள இயற்கை உரிமைகளையும் அழித்திடாதபடி பாதுகாத்திடும் பெரு நோக்குடன், நீதிமன்றங்கள், அந்தச் சட்டங்களுக்குப் பொருள் கொண்டு பணியாற்றுதல் வேண்டும் எனச் சொல்லிக்கொள்வேன்.

1957-ம் ஆண்டுச் சட்டம், அப்படிப்பட்ட ஒன்றாகும். அது சட்டமாக்கப்பட்ட போது நான் சட்டமன்றத்தில் இருந்தேன்—எதிர்த்து வாக்களித்தேன்—அன்று சொன்னதை இன்று மீண்டும் கூறுகிறேன், இந்தச் சட்டம் தேவையற்றது, தீது பயப்பது, கொடுங்கோன்மைக்கு வழி செய்வது ஆகும். நான் அந்தச் சட்டத்திற்கு எதிர்த்து வாக்களித்ததினால், அதை மீறும் உரிமையைப் பெற்றிருக்கிறேன் என்று வாதாடவில்லை. அத்தகைய தவறு நான் செய்யமாட்டேன். ஆனால் அநீதியையும் கேட்டையும், மனப்பூர்வமாகவும் தூய்மையுடனும் எதிர்த்து நிற்போர் மீது எத்தகைய தன்மையான சட்டம் ஏவப்படுகிறது என்பதை எடுத்துக்காட்டவே, இதனைச் சொல்கிறேன்.

தேவையற்ற—தீது பயக்கிற இந்தச் சட்டம், தேசிய அவமதிப்பைத் தடுப்பதற்காக என்று தெரிவிக்கப்படுகிறது. என்னென்ன நடவடிக்கைகள் அல்லது செயல்கள், தேசீய அவமதிப்பாகக் கொள்ளப்பட வேண்டும் என்பதனைக் கூறும் உரிமையாகிலும், கூர்த்த மதி படைத்த நீதிமன்றத் தலைவர்களிடம் விட்டிருக்கலாம். விடவில்லை. எல்லாவற்

"தமிழக மக்கள் என்னை வாழ்த்துவார்கள்!"

றையும் முடிவுகட்டி, இந்தச் சட்டம் தரப்பட்டு விட்டிருக்கிறது.

இவைகளுடன் மற்ருென்றையும், தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விழைகிறேன்.

எங்கள் மீது கூறப்படும் குற்றச் சாட்டுகளை மெய்ப்பிக்க, எடுத்துக் காட்டப்பட்ட சான்று ஏடுகள் கூறப்பட்ட சாட்சியங்கள் ஆகிய எதிலேயும், நாங்கள் தேசீய அவமதிப்பு காட்டவேண்டும் என்ற நோக்கம் கொண்டிருந்தோம் என்று குறிக்கப்பட்டில்லை. தேசிய அவமதிப்புச் செய்யவேண்டும் என்ற எண்ணம் யாருக்குத்தான் எதற்காகத்தான் ஏற்படப் போகிறது. எங்களுடைய அறிக்கைகளாலும் சரி, குற்றச்சாட்டினை மெய்ப்பிக்க மேற்கோள்களாக எடுத்துக்காட்டப்பட்ட எங்கள் பேச்சுத் துணுக்குகளிலாகிலும் சரி, ஒரு இடத்திலும், எங்கள் நோக்கம், தேசீய அவமதிப்பு ஏற்படுத்துவது என்று நாங்கள் கூறினதில்லை. அதற்கு மாருக எல்லாக் கட்டங்களிலும், தீர்மானங்கள் நிறைவேற்றியது, பத்திரிகையில் வெளியிட்டது, பொதுக்கூட்டங்களில் பேசியது, ஆகிய எல்லாக் கட்டங்களிலும் நாங்கள் தொடர்ந்து! தூய்மையுடன், 17-வது பிரிவைக் கொளுத்துவதன் நோக்கம், இந்தியை எதிர்க்கிருேம் என்பதை அறிவுறுத்தவே என்பதனை எடுத்துக் காட்டி இருக்கிருேம். அதிலும் அந்த நடவடிக்கைகயின் மூலம், ஆளவந்தார்கள் உறக்கத்தை நீக்கிக் கொண்டு உண்மை நிலையை உணர்ந்து, தமது அநீதியான போக்கைக் கைவிடச் செய்வதற்கே 17-வது பிரிவைக் கொளுத்த முற்படுகிருேம் என்பதனைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிருேம்.

“‘கொளுத்துவது’ என்பதற்கு ‘அறிவூட்டுவது’—‘அறிவு கொளுத்துவது’ என்பர் நல்ல தமிழ் அறிந்தோர்.

சட்டத்தைக் கொளுத்துவது, இந்தி வெறியர்களுக்கு அறிவு கொளுத்துவது என்று பொருள். என்னுடைய கண்டனத்தைத் தெரிவிக்க வேறு வழியில்லாமல்தான் ‘கொளுத்துவது’ என்று தீர்மானித்தோம்.”

என்று நான் 5-11-63 அன்று சென்னையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசியுள்ளேன். இது 11-11-63 ‘நம்நாடு’ இதழில் வெளிவந்துள்ளது.

இதனையும் தங்கள் மேலான கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன். மாண்புமிக்க நோக்கம் கொண்டு, அந்த நோக்கம் ஈடேற, தக்க செயலில் ஈடுபட வேண்டும் என்று தூய உள்ளத்துடன் ஒருவன் முற்படும் போது, அந்தச் செயல், சட்டத்தை மீறுவதாகும் என்று கூறப்படுமாளுல், அவன், தன் மனச்சாட்சியின்படி நடப்பதா, அல்லது ஆளவந்தார்கள் சூழ்ச்சிப் போக்குக்குச் சரண் அடைவதா, எது முறை என்று சீர்தூக்கிப் பார்த்துச் செயலில் ஈடுபட வேண்டி வருகிறது. நான் என் மனச்சாட்சியின்படி நடப்பது என்ற முடிவுக்கு வந்தேன்—என் தொண்டு எவ்வளவு சாமான்யமானதாக இருப்பினும், இந்தியை ஆட்சிமொழியாக்கும் திட்டத்தின் கர்த்தாக்கள், தமது தவறு உணர்வார்கள், அவர்கள் நெஞ்சம் சுடும், நேர்மைக்கு வழி எற்படும் என்று முழுவதும் நம்பி நான் செயல்பட முனைந்தேன்—தமிழக மக்கள், என் செயலை தங்களுக்கு உரிமை வாழ்வு பெற்றளிக்க மேற் கொள்ளப்படும் தொண்டு எனக் கொண்டு என்னை வாழ்த்துவார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. தமிழக மக்களுக்கு, மொழித்துறையில் வர இருக்கும் ஆபத்து மிகப் பெரும் அளவினது—எனவே இதனை நீக்க எவர் செய்திடும் தொண்டும் போதுமானது என்று திருப்திப்படுவதற்கில்லை.



அறிஞர் அண்ணா

மற்றும் கழகத் தோழர்கள்

சிறையில் இன்று

29-வது நாள்

தமிழகத்துக்கு வர இருக்கும் ஆபத்தை உணர்ந்துள்ள அனைவரும் தமது மனச்சாட்சியின்படி செயல்பட்டாகவேண்டும்.

இந்த எழுச்சி காரணமாகவே, நாங்கள், இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்க்க முனைந்து, எமது எதிர்ப்பின் அறிகுறியாக, 17வது பிரிவைக் கொளுத்த முற்பட்டோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதும், தன் கொள்கைகள், திட்டங்கள், செயல்முறைகள், நேரடி நடவடிக்கைகள் ஆகிய அனைத்தையும் வெளிப்படையாக மக்கள்முன் வைத்துவருவதை முறையாகக் கொண்டிருக்கிறது. அதனிடம் மறைவில்கூடி திட்டம் வகுப்பது, திட்டத்தை மூடி மறைப்பது போன்ற பழக்கம் கிடையாது. “தி. மு. கழகத்தின் இந்தி எதிர்ப்பு இயக்கம் இரகசிய இயக்கம் அல்ல; கதவை அடைத்துக்கொண்டு கூட்டம் போடும் கட்சி அல்ல இது. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ள வீரர்களின் பட்டியலை அரசினர் கேட்டால்கூட அளிப்பதற்கும் தயாராக இருக்கிறேன்.” என்று நான் மதுரையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டமொன்றில் குறிப்பிட்டுள்ளேன். இந்தப் பேச்சு 21—10—63 ‘நம்நாடு’ இதழிலும் வெளியிடப்பட்டிருக்கிறது.

ஏன் நான் இதனைக் குறிப்பிடுகிறேனென்ருல், குற்றச்சாட்டில், நாங்கள் ‘சதி’ செய்தோம் என்று குறிப்பிட்டிருப்பது, எங்களுக்கு மனச் சங்கடம் மூட்டுவதாக இருக்கிறது. சட்டவிரோதமான செயலில் ஈடுபட இருவரோ அதற்கு மேற்பட்டவர்களோ கூடி முடிவெடுத்தாலே, அது ‘சதி’ என்ற பட்டியலில் சேரும் என்று சட்டம் இருப்பதாகத் தெரிவித்திருக்கிருர்கள். அதனுல்தான், எங்கள் கட்சியின் வேலை முறையை விளக்கினேன். ஏனெனில், வேறு சில கட்சிகள் சில வேலைகளில் மேற்கொண்டுவிடும் மறைமுக சதி போன்றதுடன், எங்கள் கழக வேலைமுறையை ஒன்ருக்கும் தவறு நேரிடக் கூடாது என்பதற்காக இந்த விளக்கம் அளித்தேன். குற்றச் சாட்டை மெய்ப்பிக்க சான்றளித்த முதல் சான்ருளரே, எமது கழகத்தின் முறை எத்தகையது என்பதை எடுத்துக்காட்டினுர்—நாங்கள் தீர்மானங்களை நிறைவேற்றிய உடனே, அதன் படிவங்களை முறைப்படி, அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தோம் என்பதைக் கூறினுர். இந்த முறையில் வேலை செய்யும் எங்கள்மீது சதி செய்வோம் என்று குற்றம் சுமத்துவது எங்களுக்கு அருவருப்பளிப்பதாக இருக்கிறது; அத்தகைய சதிப் போக்கை, மிக அருவருக்கத் தக்கதாகவே தி. மு. க. என்றென்றும் கருதும், சதித் திட்டம் தீட்டும் கேவல நிலைக்குத் தி. மு. கழகம் ஒருபோதும் சரிந்துவிடாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சதி செய்தோம், சட்டம் மீறினோம் என்றெல்லாம் குற்றம் சாட்டப்படுவதாளுல், எங்கள்மீது எவருக்கேனும், தவருன எண்ணம் ஏற்பட்டுவிடக்கூடுமோ என்ற ஐயப்பாட்டின் காரணமாக இவைகளைக் கூறினேன். நாங்கள் மேற்கொண்ட செயல், ஆளவந்தார்களை விழிப்படைச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துக்காகவே. இந்த வயதிலே, சில காகிதத்தைக் கொளுத்தி வேடிக்கைப் பார்க்கும் விளையாட்டை நான் மேற்கொள்ள மாட்டேன் என்பதைத் தாங்கள் அறிவீர்கள்; அதுபோலவே, தேசீய அவமதிப்பு செய்வதுதான் என் நோக்கம் என்றும் எவரும் கூறமாட்டார்கள். தேசீய அவமதிப்புச் செய்வதனுல், ஒருவருக்கும் இலாபமில்லை, அத்தகைய செயலில் ஈடுபடுவோருக்கும் நஷ்டம் தாம் ஏற்படும்.

நாட்டு மக்கள் அனைவரும் சமமாகநடத்தப்படுவார்கள், நாட்டின் ஒருபகுதி, பிற பகுதியின்மீது ஆதிக்கம் செலுத்தாது என்பதை, சொல்லளவிலே மட்டுமல்ல, செயல் வடிவிலேயும் மெய்ப்பித்துக் காட்டுவதன் மூலமாகத்தான் தேசிய கௌரவம் நிலை நாட்டப்பட முடியும்.

அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவு, நடைமுறையாக்கப்பட்டு விடுமானுல், நான் நிச்சயமாக நம்புகிறேன், தேசத்தின் ஒரு பகுதி, தாழ்நிலைக்குத் தள்ளப்பட்டு, மதிப்பிழக்கும். ஒரு பகுதி மதிப்பிழப்பதின் காரணமாக, தேசிய அவமதிப்பு ஏற்பட்டு விடுகிறது. இந்தியை ஆட்சி மொழி ஆக்கும் விஷயத்தில் தவருன போக்கை மேற்கொள்வதன் மூலம், இந்தி பேசாத மக்களை ஒரே நாட்டுக்குள்ளேயே-இரண்டாந்தரக் குடிமக்களாக்கி, அதன் மூலம் தேசிய அவமதிப்பைத் தேடுகிருர்கள் என்பதை இந்தி மொழி விஷயத்தில் பிடிவாதப் போக்குக் காட்டும் ஆளவந்தார்களுக்கு உணர்த்தவே 17-வது பிரிவைக் கொளுத்த முற்பட்டோம்.

இந்திய அரசியல் சட்டத்தில் 17-வது பிரிவுதான், உள்ளபடி தேசிய அவமதிப்பு'ஏற்படுத்தி வைக்கிறது.

அத்தகைய கேட்டினை எதிர்த்து நிற்பது, மேலான செயல் என்ற தூய நம்பிக்கையுடன், எங்கள் மனசாட்சியின் படியும், ஒவ்வொருவரும் பெற்றிருக்கிற, போற்றிப் பேணவேண்டிய இயற்கை நீதி உணர்வு காரணமாகவும்; நாங்கள் இந்தி எதிர்ப்பு அறப்போரில் எங்களை ஈடுபடுத்திக்கொண்டு, அந்த அறப்போரில் ஒரு பகுதியாக அரசியல் சட்ட 17-வது பிரிவைக் கொளுத்த முற்பட்டோம். ஆகையினுல், நாங்கள் தேசிய அவமதிப்புச் செய்யும் குற்றம் செய்ய மாட்டோம் என்ற குற்றச் சாட்டை மறுக்கிருேம். நாங்கள் குற்றவாளிகள் அல்ல என்பதைக் கூறிக்கொள்கிருேம்.

○

காட்சி 2 தொடர்ச்சி

O

கிளியோ. ஓ! சீசர்! எத்தகைய மோசமான இழிவு இது! தாங்கள், தனிப்பெருந் தலைவர், ஓர் இரக்கமான காரியம் செய்தற்பொருட்டு இங்கு வந்திருக்கிறீர்கள். இத்தகைய இழிவான வேலையாட்களால் துரோகமிழைக்கப்பட்ட என்னைக் கௌரவிக்கத் தாங்களா வருவது. அவர்கள் மேலும் அவமானம் அளிக்கிறார்கள். சீசர்! நான் பரிசளிக்கக் கூடிய பாங்கான பல பரிசுகளை பாதுகாத்து வைத்திருந்தேன் பொக்கிஷத்தில். ஏனென்றால் இன்றைய நாகரிகம் நண்பர்களுக்கு நற்பரிசுகள் அளிப்பது அல்லவா! சீசரின் மனைவி லிவியாவிற்கும் அவரது சகோதரி ஆக்டேவியாவிற்கும் நான் சில பல சிறப்பான பரிசுகளைச் சேகரித்து வைத்திருந்தேன், அவர்களின் அன்பைப் பெறும் பொருட்டு. நான் வளர்த்த ஒருவனே என் உப்பைத் தின்ற ஒருவனே எனக்கு துரோகமிழைப்பான் என்று நான் நினைக்கவில்லை. கடவுளே! என்னைக் காப்பாற்று! போ, நீ! போய்விடு.

(செல்யூகசை நோக்கி)

இல்லையேல் நான் கொதிக்கும் என் இரத்தத்தின் செய்கைக்கு உட்பட்டு என்ன செய்வேனோ தெரியாது. நீயும் ஒரு மனிதனா! என் மீது துளியாவது இரக்கம் காட்டக் கூடாதா?

சீசர் : செல்யூகஸ் நீ போய்விடு.

[செல்யூகஸ் போகிறான்]

கிளியோ : நம்மைப் போன்ற பெரியவர்கள், பெயர் பெற்றவர்கூட மற்றவர்கள் செய்யும் உற்ற காரியங்களை கற்றறியாமல், குற்றம் கூறி விடுகிறோம். நாம் வீழ்ந்துவிட்டால் அதற்கு நாம் மற்றவர்களின் பலாப்லன்களைக் கூறுகிறோம் நம்முடைய பெயரில். அதனால் நாம் இரக்கத்திற்குரியவர் ஆகிறோம்.

சீசர் : கிளியோபாட்ரா நீ எங்களுக்கு எடுத்துவைத்த எழிற் பொருள்களையோ, அல்லது கொடுக்க விரும்பும் செல்வங்களையோ நாங்கள் எங்களது வெற்றிப் பட்டியலில் சேர்க்கமாட்டோம். அவை என்றும் உன்னுடையவை! அதை உன் விருப்பம்போல் உபயோகிக்கலாம், சீசர் ஒரு வணிகனல்ல நீ மற்றவரிடம் வாங்கிய பொருள்களை வாங்குவதற்கு என்பதை உணர்வாயாக. அதனால் மகிழ்ச்சியுடனிரு. உன்னுடைய எண்ணங்களே உன்னை வருந்தும்படி செய்யவிடாதே. ஏனென்றால் உன்னை என்ன செய்வது என்று உன்னிடமே கேட்டு செய்ய நாங்கள் விரும்புகிறோம். நன்கு உண்டு, உறங்கு. எங்களுடைய கவனமும், கழிவிரக்கமும் உன் மீது நிறைய இருப்பதால் கவலையடையாமல் இரு. நாங்கள் உன்னுடைய நண்பர்கள்தான். சரி. வருகிறோம்.

கிளியோ : அப்படியே, என் தலைவா! என் பிரபு!

சீசர். அப்படியொன்றுமில்லையம்மா! வருகிறேன்.

[சீசரும், அவருடைய ஆட்களும் செல்கின்றனர்]

கிளியோ : அவர் சொல்கிறார், பெண்களே அவர் சொல்கிறார், நான் எனக்குத் துரோகமிழைத்துக்கொள்ள வேண்டுமென்று. சார்மியான் இங்கு வா.

[சார்மியானிடம் இரகசியமாக ஏதோ கூறல்]

ஐராஸ் : முடிந்து விட்டது! இடிந்து விழுந்த கோட்டைக்குள் இருளினூடே, இன்பத்தை இழந்து இருப்பது போன்றுதான் உள்ளது.

கிளியோ : நான் கூறுவதை கவனத்தில் வைத்துக்கொள். முன்னமேயே கூறியுள்ளேன். அதை செயலில் காட்டி விரைவில் வா.

சார் : செய்கிறேன் அம்மா.

[மறுபடியும் டோலாபெல்லா நுழைகிறான்]

டோலா : இராணி எங்கே?

சார் : அதோ, ஐயா.

[சார்மியான் செல்கிறாள்]

கிளியோ : டோலாபெல்லா.

டோலா : அம்மா! உங்களிடம் உறுதி கூறினதற்கொப்ப, உங்கள் மீது ஏற்பட்ட இரக்கத்தினால், நான் இதைச் சொல்ல வந்துள்ளேன். சிரியா வழியாகச் சீசர் தன் பயணத்தைச் செய்யப் போகிறாராம். இன்னும் மூன்று நாளில் உங்களையும், உங்களுடைய குழந்தைகளையும் முன்னதாக அனுப்பி விடுவாராம். இதை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். நான் உங்கள் விருப்பப்படியே உறுதிப்படியே என் வேலையை செய்திருக்கிறேன்.

கிளியோ: டோலாபெல்லா. நான் உனக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

டோலா : நான் உங்கள் பணியாள் ராணி! நான் செல்கிறேன். சீசர் அழைத்தார்.

கிளியோ : மிக்க நன்றி டோலாபெல்லா. நன்றாகயிருப்பாய் நீ. சென்று வா.

(டோலாபெல்லா போகிறான்)

இப்பொழுது, ஐராஸ் நீ என்ன நினைக்கிறாய். என்னையும், உன்னையும் எகிப்திய எழில் பொம்மைகள் போன்று ரோம் நகரத்தில் எடுத்துக் காட்டப்படுவதை விரும்புகிறாயா? அடிமை இயந்திரங்கள் தங்கள் உணர்ச்சியற்ற கரங்களால் நம்மை உயரத் தூக்கி உளுத்துப்போன ரோமானியர்களுக்குக் காட்டுவார். அவர்கள் உடலினின்று வழியும் வியர்வையும், நாற்றமும் நாம் பொறுத்துக் கொள்ள வைக்காது!

ஐராஸ் : கடவுள் காப்பாற்றுவார்!

கிளியோ : இல்லை, ஐராஸ்! சிறுமையான அதிகாரிகள் நம்மை ஊதுகுழல் போன்று பிடிப்பர். மிக இழிவான முறையிலே நம்மைப் பற்றி பாடுவர். கேலியும் கிண்டலும் செய்யும் நகைச்சுவையாளர்கள் நாடகம் நடிப்பர் நம்மைப்பற்றி. கூலிக்குப் பாடும் மட்டரகமான கவிஞர்கள் எங்கள் கதையை காமக் கூத்தாக்கி விடுவர். அகிலம் புகழும் அண்டோனியை குடிகாரனாகவும், எழிலரசி கிளியோபாட்ராவை கண்டோரை மயக்கும் காரிகையாக, சூன்யக்காரியாக ஆக்கி நாடகமிடுவர்.

மூலம் **சேக்ஸ்பியர்**

தமிழில் **இரா. மதனகோபால்** பி.காம்., டி.ஐ.பி.



ஈரா : ஐயோ, கடவுளர்களே!

கிளியோ : இல்லை. இப்படித்தான் நடக்கப் போகிறது.

ஈரா : நான் அதை ஒருக்காலும் காண மாட்டேன். என் விரல் நகங்கள் விழிகளை விடக் கூர்மையானவை.

கிளியோ, உம். அதுதான் சரியான வழி. அவர்களது அந்தரங்க எண்ணத்தை அழிக்க அதுவே சரி. இதோ சார்மியான்!

[சார்மியான் நுழைகிருள்]

என்னை ஓர் எழில் ததும்பும் இராணியாக்கு. போய் என்னுடைய உயர்ந்த, சிறந்த ஆடைகளைக் கொண்டு வா—நான் மறுபடியும் சிட்னசிற்கு செல்கிறேன், மார்க் அண்டோனியைக்காண-ஐராஸ் போ, இதோ, சார்மியான். இந்த வேலையைச் செய்துவிட்டால் உனக்கும் நான் விடை கொடுக்கிறேன். என்னுடைய கிரீடத்தையும், ஆடையாபரணங்களையும் கொண்டு வா. இது என்ன சத்தம் எங்கிருந்து வருகிறது.

[ஐராஸ் செல்கிருள். ஒருவித ஒலி மெள்ள கேட்கிறது. ஒரு காவலன் உள்ளே நுழைகிருன்]

காவ : யாரோ ஒரு கிராமத்தான் இராணிக்கு அத்திப்பழங்கள் கொண்டு வந்திருக்கிருன். தங்களைக் காணவேண்டுமாம்.

கிளியோ : அவன் உள்ளே வரட்டும். எவ்வளவு அற்பமான ஆயுதம் அரும் பெருங் காரியம் சாதிக்கப் போகிறது.

[காவலன் போகிருன்]

அவன் எனக்குச் சுதந்திரம் கொண்டு வருகிருன். நான் நன்கு தீர்மானித்துக் கொண்டேன். என் நெஞ்சத்தினின்று பெண்மையின் சஞ்சல நிலா அஞ்சியோடிவிட்டது. தலையினின்று, கால் வரைக்கும் நான் சலவைக் கல்லின் உறுதி பெற்றுவிட்டேன். என்னை எதுவும் ஒன்றும் செய்துவிடாது.

[காவலன் முதலில் நுழைய, பின்னுல் கோமாளியொருவன் கூடையொன்றுடன் நுழைகிருன்.]

காவ : இவன்தான் அந்த மனிதன்.

கிளியோ : அவனை விட்டுவிட்டு நீ போகலாம்.

[காவலன் செல்கிருன்]

நோய் சிறிதுமின்றி கொல்லும் நைல் நதி தீரத்து பிராணிதானே அதில் இருப்பது.

கோமாளி : உண்மையில் என்னிடம் அது இருக்கிறது. ஆனுல், அதை தாங்கள் தொட அனுமதிக்கும் ஆளாக நான் இருக்கமாட்டேன். ஏனென்ருல் அது கடித்தால் சாவுதான். அதைத் தொட்டவர்கள் எவரும் இதுவரை பிழைத்ததாகத் தெரியவில்லை.

கிளியோ : அது கடித்து இறந்தவர்கள் யாரையேனும் நீ கண்டிருக்கிருயா?

கோமா : நிறைய பேர். ஆண்கள், பெண்கள் உட்பட நேற்றுகூட இதுபோன்ற பாம்பொன்று பெண்ணைக் கடித்ததைக் கண்டேன். ஒரு நல்ல பெண்மணி, ஏதோ சில காரணங்களுக்காக கொடுமையாக நடத்தப்பட்டாளாம். பழியும் பாவமும் அவள் மீது சுமத்தப்பட்டதாம். பாவை பாங்கான இந்த பாம்பை ஏவிக் கொண்டு, அது கடிக்க உயிர் விட்டாளாம். ஆனுல் அவள் அவஸ்தையையேதும் படவில்லை. மற்றவர்கள் சொல்வதை நாம் நம்பினுல் அவர்கள் செய்வதில் பாதிகூடக் காண முடியாது. ஆனுல் இந்தப் பாம்பு மிகப் பயங்கரமானது தீண்டினுல் தீர்ந்துவிட்டார்கள்.

கிளியோ : அதை வைத்து விட்டு, நீ போகலாம்.

கோமா : இந்தப் பாம்பை நன்கு பயன்படுத்தவும்.

கிளியோ : நல்லது.

[கோமாளி கூடையைக் கீழே வைக்கிருன்]

கோமா : இந்தப் பாம்பு அதன் இயல்புப்படிதான் நடக்கும் என்பதை கவனிக்கவும்.

கிளியோ : சரி, சரி, நீ போ.

கோமா : அந்தப் பாம்பை நம்பி நல்ல இடத்தில் வைக்காதீர்கள். அது மிகவும் கொடியது. அதில் ஏதும் நன்மை கிடையாது.

கிளியோ : நீ கவலைப்படாதே. நல்ல கவனம் எடுத்துக்கொள்ளப்படும்.

கோமா : அதற்கு ஏதும் உண்ண கொடுக்காதீர்கள். அந்தத் தகுதி அதற்கில்லை.

கிளியோ ; அது என்னை உண்ணுமா?

கோமா : எனக்கு ஒன்றும் தெரியாது, இவன் என்ன சாதாரணமானவன் என்று நினைக்காதீர்கள். பேயே பெண்ணை விழுங்காது ,என்பது எனக்குத் தெரியும். பேய்ப் பெண்ணை அலங்கரிக்காவிடில் அவள் ஆண்டவர்களுக்கு அருமையான உணவாவாள். ஆனுல் கடவுள்களின் பெண்களை பாழ்படுத்தி விடுகின்றன இவைகள். ஆண்டவன் உண்டாக்கும் பத்து பாவைகளில் பாதியை பாழாக்கி விடுகின்றன, பேய்கள்.

கிளியோ : சரி, நீ போகலாம்! நன்றி.

கோமா : இந்தப் பாம்பை நன்கு பயன்படுத்தவும்.

[போகிருன், கோமாளி]

ஐராஸ் மறுபடியும் மணிமுடிகளுடனும் ஆடையாபரணங்களுடனும் வருகிருள்]

கிளியோ : என்னுடைய உடைகளை யணிவி. மணிமுடியை என் தலையில் வை. அழியாத ஆசைகள் என் மனதில் ஆட்டம் போடுகின்றன. இனிமேல் இந்தப் பவள உதடுகளை எகிப்தின் இனிய திராட்சை மது தீண்டப் போவதில்லை—ஐராஸ், ஐராஸ் விரைவாகச் செய்—அருமை அண்டோனி என்னை அழைப்பதைக் காணுகின்றேன். அவர் துயிலினின்று எழுந்து தூய்மையான என் செய்கையைப் பெருமையுடன் நோக்குகிருர். அவர் சீசரின் நல்வாய்ப்பை எள்ளி நகையாடுவதைக் கேட்கிறேன், நான் மனிதர்கள் தங்கள் செய்கைக்கு விளக்கம் தரத் தெரியாமல்-அதிர்ஷ்டம் என்றல்லவா கூறுகின்றனர். அருமைக் கணவரே, இதோ வருகிறேன். என் பெயரைக் காப்பாற்றிக் கொள்கிறேன் வீரத்துடன். நான் இப்பொழுது நெருப்பும், நீரும் என்னுடைய மற்ற உடற்பொருள்கள் உளுத்துப் போன வாழ்க்கைக்கு கொடுத்துவிட்டேன்—என்ன முடித்து விட்டாயா, அலங்காரத்தை? அப்படியானுல் அருமை ஐராஸ் வா. வந்து என் அதரத்தை முத்தமிட்டு இறுதி விடை பெற்றுக் கொள். ஐராஸ், நல்லபடியிரு.

[ஐராசையும், தோழிகளையும் முத்தமிடுகிருள், ஐராஸ் சோகத்தின் எல்லையில் கால் வைத்து பிரக்ஞையற்று உயிரிழந்து தரையில் விழுகிருள். மற்றவர்களும் அப்படியே.]

என் உதட்டில் கொடிய நஞ்சு உள்ளதா? விழுந்து விட்டாயா நீ? நீயும், இயற்கையும் அப்படி மெல்ல பிரிந்தால்—சாவின் கரங்கள் மெல்ல தட்டுவதாகயிருந்தால், காதலன் காதலியைத் தட்டுவதைப் போன்று இருந்தால் யாரும் அதை வரவேற்காமல் இருக்க மாட்டார்கள்! இன்னும் படுத்திருக்கிருயா நீ? இப்படி நீ மறைந்தாயானுல் நீ உலகத்திற்கு எப்படி பிரிந்தேன் என்று கூறிவிட்டு வா.

[அடுத்த இதழில் முடியும்]

தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற
வெண்சங்கு சீயக்காய்த் தூள்
எங்கும் கிடைக்கும்.
மணத்தில் மிகுந்த
செல்வம்ராணி ஊதுபத்திகளை
உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள் :
வெண்சங்கு சீயக்காய்த்தூள் பாக்டரி
3037—38 டபீர்குளம் ரோடு, தஞ்சை

ஏஜெண்டுத் தோழர்களுக்கு

வணக்கம்.

நவம்பர் மாதம் முடிய பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. உடன் அதற்கான தொகையை தவருது அனுப்பிவைக்க வேண்டுகிருேம்.

நிர்வாகி: 'திராவிடன்'
சென்னை 1.

காந்தியார் எங்கள் பக்கம்; காங்கிரசே நீ அழிவாய் நிச்சயம்!

என். வி. என். சோமு பி.ஏ.

தென்னக மக்களின் இதயங் கவர்ந்த பெருந்தலைவர் — நலிவுற்ற மக்களின் நம்பிக்கை நட்சத்திரம் — இலட்சக்கணக்கான தம்பிமார்களின் தகைமைசால் அண்ணன், இன்றைய தினம் தன்னைத்தானே வருந்திக்கொண்டு வெஞ்சிறையில் வாடுகின்றார்!

கடந்த 25 ஆண்டுக்காலமாக தமிழக மக்களின் தன்மானப் போராட்டமாக நடைபெற்றுவரும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில், தொடர்ந்து ஈடுபட்டு வழிகாட்டி வரும் அறிஞர் அண்ணா அவர்கள். இன்றைய தினம் தாய்மொழி காக்கும் தன்மானப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை புகுந்துள்ளார்.

தமிழ் மொழிக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை நீக்க வேறெந்த கட்சிக்கும் அக்கறையில்லை!

வேறெந்தத் தலைவருக்கும் உணர்ச்சியில்லை!

மொழிப்போர் என்றால், கனக விசயர்களுக்குப் புத்தி புகட்டிய சேரன் செங்குட்டுவனை யடுத்து, அறிஞர் அண்ணாவின் பெருந்தொண்டைப் பற்றித்தான் தமிழகத்தின் புகழ்மிக்க வரலாறு பக்கத்துக்குப்பக்கம் எடுத்துக்கூறும்!

வரலாற்றுப் புகழ்மிக்க அந்த வீரத் தலைவரின் பணியை—புகழைப்-பொறாமைக்காரர்கள் சிலர்,

ஆங்கிலத்தைக் காக்க ஒரு போராட்டமா என்றும்,

தமிழைக் காக்கும் அக்கறை அவருக்கு இல்லை என்றும்,

இதுவா போராட்டம் என்றும் கேட்கின்றனர்.

—வரலாற்றில், கனகவிசயர்கள் பெற்ற இடத்தைக்கூட அவர்கள் பெறப் போவதில்லை!

இந்தியத் துணைக்கண்டத்தில் அமைதி வழி அரசியலை மேற்கொண்டு மகத்தான வெற்றிகளைச் சந்தித்த காந்தியாருக்குப் பிறகு, அவரைவிட அமைதியான அரசியலை நடாத்திச் செல்லும் ஒரு பெரும் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் மொழிக்கு வந்துற்ற கேட்டினைக் களைய இன்றைய தினம் சிறை நண்ணியுள்ளார்.

"என் தொண்டு எவ்வளவு சாமான்யமானதாக இருப்பினும் இந்தியை ஆட்சிமொழியாக்கும் திட்டத்தின் கர்த்தாக்கள், தமது தவறு உணர்வார்கள்—அவர்கள் நெஞ்சம் சுடும் நேர்மைக்கு வழி ஏற்படும் என்று முழுவதும் நம்பி நான் செயல்பட முனைந்தேன்"

—என்று நீதிமன்றத்தில் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார் அண்ணா!

அவரது போராட்டத்தைக் குறைகூறுவோர், தமிழுக்கு வந்துள்ள ஆபத்தை நீக்க இதைவிடச் சிறந்த போராட்டத்தைத் துவக்குவார்களா என்றால் அதுவும் இல்லை!

ஆகவேதான் அண்ணா அவர்களது போராட்டத்தைக் குறைகூறும் மாற்றுக் கட்சியினரின் அறிவு தெளிவடையும் வண்ணம் தனது பணி சாமானியமானதாக இருந்தாலும் அது இந்தியைத் திணிப்பவர்களின் நெஞ்சைச் சுடும் என்று கூறியுள்ளார்!

அதிகாரவர்க்கம் கண்மூடித்தனமாகப் பிரயோகிக்கும் அடக்குமுறைகளைத் தாங்கிக் கொள்ளும் தியாக உள்ளம் படைத்த தோழர்கள் பலருடன் அண்ணா சிறைக் கோட்டம் நண்ணிவிட்டார்.

அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து அண்ணல் காந்தியடிகள் அறப்போர் மேற்கொண்ட போது இருந்த அதே நிலை இன்றும், காந்தி வழிவந்தவர்கள் என்று கூறிக்கொள்ளும் காங்கிரஸ் சர்க்கார் ஆட்சியிலும் உள்ளது.

தடையுத்திரவுகள்
தடியடிப் பிரயோகங்கள்
கடுஞ்சிறை வாசங்கள்
கடுமையான சட்டங்கள்

—இவற்றைப் பிரயோகித்து வருகிறது காங்கிரஸ் ஆட்சி!

"நபர்களின் சுதந்திரத்தை ஒடுக்கியும், பறிமுதல் செய்தும் அவசரச் சட்டங்களால் யதேச்சாதிகார தோரணையில் இந்தியா ஆளப்பட்டு வருகிறது. இருந்தாலும் நம்மை ஆள்பவர்கள் ஜனநாயகத்தைப்பற்றி நீளமாகப் பேசுகிறார்கள். ஜனநாயகத்தின் சாயைகூட (நிழல்கூட) இந்தியாவில் இல்லை"

—கண்மூடித்தனமாக நடக்கும் அரசினரைப்பற்றி இவ்வளவு தெளிவாகக் கூறியிருப்பது பண்டிதர் நேரு அவர்கள்!

இப்போது அல்ல—ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு முன்னர், வெள்ளையர்களை எதிர்த்து வீர முழக்கம் எழுப்பிய பண்டிதர், சிறைச்சாலையின் கம்பிகளுக்குப் பின்னால் இருந்து உருவாக்கிய சிந்தனைச் சித்திரம் இது!

அவர் தீட்டிய வீரமுழக்கங்கள் இன்று தான் தலைவராக இருந்து நடத்தும் காங்கிரஸ் கட்சி ஆட்சி செலுத்தும் இந்தியத் துணைக் கண்டத்துக்கு, 25 ஆண்டுக் காலத்திற்குப் பின்னாலும் அப்படியே பொருந்துவதை அவர் அமைதியாகச் சிந்தித்துப் பார்க்கட்டும்!

"ஒரு நாடு தன்னுடைய தனித்தன்மையைப் பாதுகாத்துக்கொள்ளவும், மக்களின் அறிவுத் திறனை வளர்க்கவும் வேண்டுமானால், அந்த மக்களின் இதயத்திலும், அறிவிலும் வேர்விட்டுப் பதிந்துள்ள மொழியினால்தான் செய்ய இயலும்" ('A country can preserve it's individuality and develop the sense of the masses only through the languages which have deep roots in their minds and hearts (என்று மிகத் தெளிவாக கடந்த ஏப்ரலில் பாராளுமன்றத்தில் கூறிய பண்டிதர், தமிழகத்தையும், தமிழக மக்களையும் முன்னேற்ற, அந்த மக்களுக்குக் கிஞ்சித்தும் தெரியாத இந்தி மொழியால் எப்படி முடியும் என்று எண்ணினாரா?

இதை எண்ணும்படி கேட்ட அண்ணாவுக்கா சிறைவாசம்?

"நாம் எந்த மொழியையும் நசுக்கவோ, அல்லது யாரையும் ஒரு மொழியைப் படிக்கும்படி வன்முறையால் வற்புறுத்தவோ, கூடுமானவரை முயலக்கூடாது" (We should not try to suppress a language or coerce anybody into the study of a language as far as possible") என்று கூறிக்கொண்டே, இன்னொரு பக்கம் இந்தியைப் படிக்காவிட்டால் பலனேதும் கிடைக்காது என்று அரசு ஊழியர்களையும், மாணவர்களையும் பயமுறுத்துதல் நியாயமானது தானா என்று பண்டிதர் சிந்தித்தாரா?

இதைச் சிந்திக்கும்படி சொன்னதற்கா அண்ணாவுக்குச் சிறை?

செய்வதையும் செய்துவிட்டு வஞ்சிக்கப்பட்ட மக்கள் வேறு வழிகள் இல்லாத காரணத்தால் உரிமைகோரி அமைதியான கிளர்ச்சி நடத்தும்போது, அதை குழந்தைத்தனம் என்றும், முட்டாள்தனம் என்றும் கண்மூடித்தனமாக அர்ச்சிப்பதுதான் ஜனநாயகமா?

அதுதான் காந்தியார் சொன்ன அறவழியா?

இன்றைய தினம் அறிஞர் அண்ணா அவர்கள் காந்தியாரையும் மிஞ்சிய அகிம்சாவாதியாகி விட்டார்.

தமிழகத்துக்கு வரும்போதெல்லாம் கடுமொழி கக்கிடும் பண்டிதருக்குப் பன்முறை தமிழகம் தக்க படிப்பினை தந்திருக்கிறது!

'மன்னிப்போம் மறப்போம்' என்று பெருந்தன்மையோடு கூறினார் அறிஞர் பெருந்தகை அண்ணா!

இம்முறை கிளர்ச்சிக்குரிய பெருந்தலைவர்—நாட்டு மக்களின் சிந்தை அணுவெல்லாம் குடியிருக்கும் பேரறிஞர் அண்ணா அவர்கள் சிறையிலிருக்கிறார் என்ற இரக்கம் சிறிதுமின்றி இம்முறையும் கடுமொழி கக்கியிருக்கிறார் காந்தியின் வாரிசு!

ஆனால் அறிஞர் அண்ணா அவர்கள் பண்டிதரின் பரிதாப நிலையைக் கண்டு, சிறைக்குள்ளிருந்து ஒரு அலட்சியப் புன்னகையைப் பதிலாக அளித்தார்!

அதிகாரவர்க்கமோ ஆர்ப்பரித்து நிற்கிறது!

திடீர்திடீரென்று கைதுகள்! திடீர்திடீரென்று விடுதலைகள்!

அடக்குமுறை உத்தரவுகள்—ஆட்சியினரின் பயமுறுத்தல்கள்! என்ன நடக்கிறது என்பதே தெரியாமல் எதேச்சாதிகாரம் நடத்துகிறது காங்கிரசாட்சி!

'அதிகாரவெறி மனிதனை குருடாகவும், செவிடாகவும் மாற்றி விடுகிறது—தங்களது மூக்குக்கு கீழே இருப்பதையும் அவர்களால் பார்க்கமுடியாது— அவர்கள் செவிகளில் புகும்விவரங்களையும் கேட்கமுடியாது— பதவிப்போதை ஏறிய அரசாங்கம் எதைச் செய்யும் எதைச் செய்யாது என்று கூறமுடியாது —ஆகவே நாட்டுப்பற்று மிக்கவர்கள், வீரமரணம், கடுஞ்சிறை வாசம், இன்னும் இதைப் போன்ற கொடுமைகளையும் ஏற்றுத் தீரவேண்டும்"

—என்று 1949வரை வாழ்ந்துவழிகாட்டிய காந்தி அரசாங்கத்தின் போக்கைத் தெளிவாக வரையறுத்துவிட்டார்! அதே 1949ம் ஆண்டு கழகம் கண்ட, வாழ்கின்ற காந்தி—வழிகாட்டும்ஞானி—அண்ணா அவர்கள்ஆட்சிபீடத்தின் கொடுமைகளை ஏற்றுச் சிறை வாழ்வே திருநாள் என்றுகூறி சிறை நண்ணிவிட்டார்!

தியாகத்தின் திருவுருவே! தென்னாட்டுக் காந்தியே! மூக்குக்குக்கீழேஇருப்பதைக்கூட காண்பதற்குச் சக்தியற்றவர்களின் போக்கை உங்கள் சிறைவாழ்வு திருத்தட்டும்! திருந்த மறுப்பவர்களுக்கு 1967-ல் தீர்ப்பளிக்கக் காத்திருக்கிறது மக்கள் சமுதாயம்! நிச்சயம் திரும்பி ஓடும் சர்வாதிகாரம்!

திராவிடன்
அடுத்த இதழ்
அறப்போர் விவரங்கள்-படங்கள்
மதியழகன் முழு வாக்குமூலம்—
சிறப்புக் கட்டுரை—செய்திகள்
ஆகியவற்றுடன்
21-12-63 அன்று வெளிவரும்.

பதிவு எண்: 7178 திராவிடன் தொலைபேசி 33581

அண்ணாவுக்கு 6 மாத கடுங்காவல்

டி.எம். பார்த்தசாரதி, டி.கே. பொன்னுவேலு வி. வெங்கா, கே. பி. சுந்தரம் ஆகியோருக்குப் இதே தண்டனை !

•

அண்ணா, மற்றும் தோழர்கள் டி. எம். பார்த்தசாரதி, டி. கே. பொன்னுவேலு, வி. வெங்கா, கே. பி. சுந்தரம் ஆகியோர் மீது போலீசாரால் தொடரப்பட்டிருந்த வழக்கை, தலைமை மாகாண மாஜிஸ்திரேட் திரு. பி. எஸ். சோமசுந்தரம் அவர்கள் விசாரித்து 10—12—63 அன்று அண்ணா உள்ளிட்ட ஐவருக்கும் ஆறு மாத கடுங்காவல் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

வழக்கு முடிவை அறிந்து கொள்வதற்காக, ஏராளமான கழகத் தோழர்களும், பொது மக்களும் நீதி 'மன்றம் நோக்கி வந்த வண்ணமிருந்தனர்.

நீதிமன்றத்தின் உள்ளும் புறமும், நீதிமன்றம் உள்ள சாலை நெடுகிலும் ஏராளமான போலீசார் நிறுத்தப்பட்டிருந்தனர்.

நீதிமன்றத்திற்குள் முக்கியமானவர்களே அனுமதிக்கப்பட்டனர். மற்றவர்களெல்லாம் தொலைவிலேயே நின்றிருந்தனர்.

போலீசாரின் கெடுபிடிகளையும் சமாளித்துக்கொண்டு, நீதி மன்றம் நிரம்பி வழியும்படியாகக் கழக முக்கியஸ்தர்கள் 'பலரும் வந்து குழுமியிருந்தனர்.

தி. மு. க. தலைமைக் குழுவினரான இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, என். வி. நடராசன், ஏ. கோவிந்தசாமி, சி. பி. சிற்றரசு, சத்தியவாணிமுத்து, மற்றும் தோழர்கள் க. அன்பழகன், கி. மனோகரன் எம்.பி. க. ராசாராம் எம்.பி., கே. ஆர். இராமசாமி, எம்.எல்.சி., எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.சி. எஸ். முருகையன் எம். எல். ஏ., இராம. அரங்கண்ணல் எம். எல். ஏ. ஏ. வி. பி. ஆசைத்தம்பி, காஞ்சி கல்யாணசுந்தரம், கே. ஏ. கிருட்டிணசாமி, முரசொலி மாறன், என். வி. என். சோமு, வழக்கறிஞர் இரா. இளம்வழுதி, குறிஞ்சிப்பாடி சாம்பசிவம், ஏ. வி. தண்டபாணி, கே. எம். கண்ணபிரான், வி. முனுசாமி, அ. பொ. அரசு, சிட்டிபாபு, சடகோபன், டி. என். கிருஷ்ணன், தம்பித்துரை, அலமேலு அப்பாதுரை, அ. செல்வராசன், குமாரபாளையம் எஸ். எஸ். எம். சுப்பிரமணியம் டபிள்யூ பி.பி. சுந்தரம், நீலநாராயணன், சி. வி. எம். அண்ணாமலை, வழக்கறிஞர்கள் நாராயணசாமி, நாராயணன், கணபதி, சி. வி. ராசகோபால், ஏ. பி. சனார்த்தனம், மு. வேதாசலம், முல்லை. சத்தி, திருவொற்றியூர் சண்முகம், செங்கோட்டுவேல், முத்துராமலிங்கம், அறிவுடை நம்பி, மைனர் மோசஸ், கா. வேழவேந்தன், ரங்கூன் அங்குத்துரை, டி. கே. கபாலி, கோ. செங்குட்டுவன், தலைமை நிலையம் தேவராசன், எஸ். வி. வேலு மற்றும் கழகத் தோழர்கள் ஏராளமானவர்கள் வருகை தந்திருந்தனர்.

அண்ணா அவர்கள் போலீசு வண்டியில் நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்ட போதும், தண்டனை பெற்றுச் சிறைச்சாலைக்கு ஏற்றிச் செல்லப்பட்ட போதும் கூடியிருந்த கழகத் தோழர்களும் பொதுமக்களும், 'அண்ணா வாழ்க; இந்தி ஒழிக; தமிழ் வாழ்க' என விண்ணதிர முழங்கினர்.

○

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் அறிஞர் அண்ணா அவர்களோடு ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை யடைந்த

தோழர்கள்

டி. கே பொன்னுவேலு

டி. எம். பார்த்தசாரதி

வி. வெங்கா

கே. பி. சுந்தரர்

ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி-நடராசன்—சோமு அச்சகம், 16, இப்ராகிம் சேட் தெரு, சென்னை-1.